210 2/0

A
HISTORY OF INDIA

FOR STANDARD VI

8 - JUL 1940

BY
G. V. RAMA AYYAR, B. A., L. T.,
Town High School, Kumbakonam

3720
3800

G. V. K. SWAMI & Co.,
PUBLISHERS. :: KUMBAKONAM.

Price As. 6

இந்து தேச சரித்திரம்

(ஆருவது வகுப்புக்கு)

954

OFFICE OF THE REGISTRAR ... 9 - JUL 1940 MADRA...

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் சரித்திர ஆசிரியர்

G. V. ராமய்யர், B. A., L. T.,

எழுதியது

3726

ஜீ. வி. கே. ஸ்வாமி அண் கோ.,

பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்.

பதிப்புரிமை] 1940 [விலை அணு 6

Second Impression

Printed at The Swamy Power Printing Works, Kumbakonam.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - JUL 1940
MADRAS

முகவுரை

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், பிற்கால வாழ்க்கைக்கும் துணைசெய்யக் கூடியது சரித்திர அறிவாகும் என்பது உலக மறிந்ததே. அந்த அறிவு முதற்கண் நமது நாட்டின் அறிவைப்பற்றியதா யிருப்பது சாலச் சிறந்ததாகும்.

இந்த உண்மையைப் பின்பற்றி நாட்டை முன்னேற்ற முயலும் சான்றோர், சிறுவர்களுக்குத் தேச சரித்திர அறிவைப் புகட்ட அரும் பாடுபட்டு வருகின்றனர். அந்தச் சான்றோர்களின் நன் முயற்சிக்கு ஒரளவேனும் உதவியாக இருக்கலாம் எனக்கருதி இந்தச் சிறிய புத்தகம் வெளியிடப்படுகிறது.

இப்புத்தகம் சென்னைக் கல்வி இலாகா அதிகாரிகளால் புதிதாக வெளியிடப்பட்டிருக்கிற சரித்திரப் பாடத்திட்டங்களை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் அந்தந்த வகுப்பிற்கு வேண்டிய சரித்திர விஷயங்கள் மாணவர்களுக்குப் பகுத்தறிவும் சரித் திரப் படிப்பில் ஊக்கமும் உற்சாகமும் வளரும்படியாகச் சுலபமானநடை யில் எழுதப்பட்டிருக்கின்றன. இப் புத்தகத்தில் சரித்திர வரலாறுகளைச் சுலபமாய்க்கற்றறிய உதவும் பொருட்டுத் தேசப்படங்களும் உருவப்படங் களும் பல தயாரிக்கப்பட்டுப் பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட் டுள்ளன. ஒவ்வொரு பெரும் பகுதியின் முடிவிலும் கால அட்ட வணையும் கேள்விகள் ஜாப்தாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

தாய் மொழியில் சரித்திரப் பாடங்களைக் கற்பிக்க முயன்றுவரும் இக்காலத்தில் சுருங்கிய முறையில் படிப்படியாக எழுதி வெளிவரும் புத்தகங்கள் பெரும் பயன் படுவன என்பது தவறாகாது. இம்முறை யில் இது முதலாவது புத்தகம்.

இந்தச் சரித்திரப் புத்தகங்களைப் பள்ளிக்கூடங்களில் வைத்து ஆதரவளிக்குமாறு ஆசிரியர்களும், கல்வியதிகாரிகளும் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

G. V. ராமய்யர்

பொருளடக்கம்

அத்தியாயம்			பக்கம்
1.	இந்தியா	...	1
2.	இந்தியாவின் பூர்வீகக் குடிகள்	...	6
3.	ஆரியர்கள்	...	8
4.	,, (தொடர்ச்சி)	...	13
5.	புத்த மதம்	...	17
6.	ஜயின மதம்	...	22
7.	அலெக்சாண்டர்	...	25
8.	மகத ராஜ்யத்தின் முன்னேற்றம்	...	30
9.	மௌரிய சந்திரகுப்தர்	...	32
10.	அசோக சக்கரவர்த்தி	...	35
11.	அசோகருக்குப் பின் இந்தியாவின் நிலைமை	...	39
12.	குஷான் ராஜ்யம்	...	41
13.	சந்திரகுப்தரும் சமுத்திர குப்தரும்	...	43
14.	சந்திர குப்தர் II	...	45
15.	ஹர்ஷவர்த்தனர்	...	50
16.	ராஜபுத்திரர்கள்	...	55
17.	தக்காணச் சரித்திரம்	...	59
18.	பல்லவர்கள்	...	63
19.	தென்னிந்தியச் சரித்திரம்	...	66
20.	இந்து மதாச்சாரியார்கள்	...	75

உருவப் படங்கள்

			பக்கம்
1.	தோடர் குடிசை	...	6
2.	புத்தர்	...	17
3.	அலெக்சாண்டர்	...	25
4.	அசோகர் நாட்டிய ஒரு கல் தூண்	...	37
5.	குப்த நாணயங்கள்	...	48
6.	எல்லோராவிலுள்ள கோவில்	...	61
7.	மஹாபலிபுரம் கோவில்கள்	...	64
8.	தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில்	...	69
9.	ஸ்ரீமத் சங்கராச்சாரியார்	...	76
10.	ஸ்ரீமத் ராமானுஜாச்சாரியார்	...	77
11.	ஸ்ரீமத் மத்வாச்சாரியார்	...	78

படங்கள்

1.	ஆரிய ராஜ்யங்கள்	...	10
2.	அலெக்சாண்டர் வந்து சென்ற வழி	...	26
3.	குப்த ராஜ்யம்	...	46
4.	ஹர்ஷ ராஜ்யம்	...	51
5.	தென் இந்தியா	...	66

இந்தியாவின் இயற்கையமைப்பு

1940

இந்து தேச சரித்திரம்

1. இந்தியா

நாம் வசிக்கிற தேசத்திற்கு இந்தியா என்பது பெயர். அது ஒரு பெரிய தேசம். வெகு காலத்திற்கு முன்பு நமது தேசத்தின் வட பாகத்தில் பரதர் என்ற ஓர் மன்னர் ஆண்டுவந்தார். அதனுல் அதற்குப் பரத கண்டம் என்ற பெயரும் வழங்கி வருகிறது.

நமது தேசம் ஆசியாக் கண்டத்தின் தென் பாகத்தில் இருக்கிறது. அதன் வடக்கு எல்லையாகப் பெரிய மலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு இமய மலைகள் என்பது பெயர். அவை இவ்வுலகிலுள்ள எல்லா மலைகளிலும் மிகவும் உயரமானவை. ஆகையால் அயல் நாட்டார்கள் அவைகளைத் தாண்டி இந்தியாவிற்குள் வரக் கூடவில்லை. இமய மலைகளை இந்தியாவின் பாதுகாப்பிற்கென்றே கடவுள் அதன் வடக்கு எல்லையாக அமைத்திருக்கிருர் போல் இருக்கிறது.

இந்தியாவின் வட மேற்கு எல்லைப் புறத்தில், இமய மலைகளின் மேற்கு முனையிலிருந்து சூலைமான், கர்தார் என்ற இரண்டு மலைகள் இருக்கின்றன. அவைகளில் கைபர், போலன், கோமல் போன்ற பல கணவாய்கள் இருக்கின்றன. கணவாய் என்பது இரண்டு உயரமான குன்றுகளுக்கு நடுவிலுள்ள ஒரு குறுகலான பாதை. அக்கண

வாய்களின் வழியாக அன்னியர்கள் நமது தேசத்திற் குள் வரக்கூடுமல்லவா? பண்டைக் காலத்தில் ஆரியர் கள், கிரேக்கர்கள், பாரஸீகர்கள், சாக்கர்கள் முதலான வர்கள் அக்கணவாய்களின் வழியாகத்தான் இந்தியா விற்குள் வந்தார்கள். அது போலவே, அன்னியர்கள் எச்சமயத்திலும் வட இந்தியாவிற்குள் வரக்கூடும். ஆத லால், அரசாங்கத்தார் அவைகளில் சைன்யங்களை வைத்து, அயல் நாட்டார்கள் வரக்கூடாதபடி நமது தேசத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

நமது தேசத்தின் வட கிழக்கு மூலையிலுள்ள குன்றுப் பிரதேசத்தில் அநேக இடைவெளிகள் இருக் கின்றன. அவற்றின் வழியாகப் பண்டைக் காலத்தில் மங்கோலியர்கள் என்ற ஒரு கூட்டத்தார் வட இந்தியா விற்கு வந்தார்கள். ஆதலால், அரசாங்கத்தார் நமது தேசத்தின் வட கிழக்கு எல்லைப் புறத்தையும் சேனை களைக் கொண்டு பாதுகாத்து வருகிறார்கள்.

வட இந்தியாவில் இமய மலைகளுக்குத் தெற்கே ஒரு பெரிய சமவெளி இருக்கிறது. அதன் மேற்குப் பாகத் தில் சிந்து நதியும் அதன் உபநதிகளும் ஓடுகின்றன. அவை ஓடும் சமவெளி மிகச் செழிப்பும் அதிக ஜல வசதியும் உள்ளது. ஆகையால் அங்கு சுமார் 5000 வரு ஷங்களுக்கு முன்பே ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வசித்து வந்தார்கள். பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பு நமது தேசத்திற்கு வந்த ஆரியர்களும் சிந்து நதித் தீரத்தில் தான் முதல் முதலில் தங்கி வசித்து வந்தார்கள்.

அரவல்லி மலைகளுக்குக் கிழக்கேயுள்ள பெரிய சம வெளிப் பிரதேசத்தில் கங்கை நதியும், யமுனை முதலான அதன் உபநதிகளும் ஓடுகின்றன. அச் சமவெளி அதிகச் செழிப்பும் ஜல வசதியும் உள்ளது. ஆகையால், சிந்து நதித் தீரத்தில் குடியேறியிருந்த ஆரியர்கள் கங்கைச் சம வெளியிலும் குடியேறினார்கள். அவர்கள் அரவல்லி மலைகளுக்கு வடக்கேயுள்ள மேட்டு நிலத்தின் வழியாகக் கங்கை நதித் தீரத்திற்கு வந்தார்கள்.

வட இந்தியச் சமவெளியின் தெற்கு எல்லையாக விந்திய, சாத்பூரா மலைகள் கிழக்கு மேற்காக இருக்கின்றன. அவற்றிற்கு இடையிலே நருமதை நதி ஓடுகிறது. சாத்பூரா மலைக்குத் தெற்கே தபதி என்ற ஒரு ஆறும் ஓடுகிறது. இதனால் வட இந்தியாவில் ஆரியர்கள் குடியேறி அநேக நூற்றாண்டுகள் வரை தக்காணத்திற்கும் தென் இந்தியாவிற்கும் வரக்கூடவில்லை.

விந்திய பர்வதத்திற்குத் தெற்கேயுள்ள இந்தியா மூன்று பக்கங்களில் கடலால் சூழப் பட்டிருக்கிறது. மேற்குக் கடற்கரைச் சமீபத்தில் மலைகள் சில கணவாய்களுடன் இருக்கின்றன. அவற்றிற்கு மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்பது பெயர். கிழக்குக் கடற்கரையிலிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு மலைத்தொடர் அநேக இடை வெளிகளுடன் இருக்கிறது. அவற்றிற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் என்று பெயர். அம் மலைகளுக்கு இடையில் தக்காணம் என்ற பீட பூமி இருக்கிறது. தக்காணத்தில் குன்றுகள் அதிகம். மழை குறைவு. கோடையில் உஷ்ணம் அதிகம். கோதாவரி, கிருஷ்ணா, முதலான

ஆறுகள் தக்காணப் பீடபூமியின் வழியாக ஓடுகின்றன. அங்கு வசிக்கும் மக்கள் தேக திடமும் மனோ தைரியமும் உள்ளவர்கள்.

கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கூடும் பிரதேசத்தில் நீலகிரி மலை உள்ளது. நீலகிரி மலைப் பிரதேசத்தில் தோடர்கள், படகர்கள் என்ற பூர்வீகக் குடிகளின் சந்ததியார்கள் வசித்து வருகிறார்கள்.

மேற்குக் கடற்கரைச் சமவெளியில் மழை அதிகம். அதன் குறுக்கே ஓடும் அநேக ஆறுகள் விவசாயத்திற்கு உதவுகின்றன. அங்கு வசிக்கும் ஜனங்கள், தென் இந்தியாவின் இதர பாகங்களில் உள்ள ஜனங்களுடன் மலைகள் குறுக்கிடுவதால் நெருங்கிப் பழகக் கூடவில்லை. அதன் தென் பாகத்தில் சேர ராஜ்யம் சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பே இருந்து வந்தது.

கிழக்குக் கடற்கரைச் சமவெளி செழிப்பும் ஜல வசதியும் உள்ளது. பல ஆறுகள் விவசாயத்திற்கு உதவுகின்றன. இந்தச் சமவெளியில் தானிய விளைவு அதிகம். ஆதலால் பண்டைக்காலம் முதற்கொண்டு இங்கு மக்கள் வசித்து வருகிறார்கள். 2000 வருஷங்களுக்கு முன்பே சோழர்களும், பாண்டியர்களும் தென் இந்தியாவில் வசித்து வந்தார்கள்.

இந்தியாவின் கடற்கரை அதிக நீளமாயுள்ளது. பண்டைக் காலத்திலே சேர, சோழ, பாண்டிய மன்னர்

கள் தங்கள் ராஜ்யங்களின் பாதுகாப்பிற்காகச் சிறந்த தரைப் படைகளை வைத்துக் கொண்டதுடன், கப்பற் படைகளையும் வைத்திருந்தார்கள். தக்காணத்தில் அரசாண்ட சாளுக்கிய மன்னர்களும் நாட்டின் பாதுகாப்பிற்காகச் சிறந்த கப்பற்படையை வைத்திருந்தார்கள். கடல் ஆதிக்கம் பெற்றவர்களே இந்தியாவின் தென் பாகத்திற்குக் கடல்மார்க்கமாய் வரக்கூடுமல்லவா? நமது தேசத்தைக் கடலாதிக்கம் பெற்றுள்ள பிரிட்டிஷ்காரர்கள் பாதுகாத்து வருகிறார்கள்.

கேள்விகள்

1. இந்தியாவின் மீது அன்னியர்கள் ஏன் வடக்கேயிருந்து படையெடுக்கக் கூடவில்லை ?
2. அன்னியர்கள் பண்டைக் காலத்தில் வட இந்தியாவுக்கு எப்படி வந்தார்கள் ?
3. வட இந்தியாவில் ஜனங்கள் ஆதிகாலந்தொட்டு எங்கே வசித்தார்கள் ?
4. ஆரியர்கள் தென்னிந்தியாவிற்கு ஏன் வெகுகாலம் வரக் கூடவில்லை ?

2. இந்தியாவின் பூர்வீகக் குடிகள்

நமது தேசமாகிய இந்தியாவில் ஜனங்கள் ஆதி காலந்தொட்டு வசித்து வந்ததாகத் தெரிய வருகிறது. அவர்கள் முதல் முதலில் வட இந்தியாவில் சிந்து நதித் தீரத்தில் வசித்தார்கள். பண்டைக் காலத்திலேயே அவர்கள் அதிக நாகரிகம் உள்ளவர்களாய் இருந்து வந்தார்கள். நமது தேசத்தில் முதல் முதலில் வசித்த



தோடர் குடிசை

மக்கள் கல்லினால் கருவிகளைச் செய்து உபயோகித்தார்கள். அவர்கள் மிருகங்களை வேட்டையாடினார்கள். கலப்பை முதலான விவசாயக் கருவிகளையும் செய்து கொண்டார்கள். நிலத்தை உழுதுத் தானியங்களைச் சாகுபடி செய்தார்கள். அவர்கள் உபயோகித்து வந்த

கல்லாயுதங்களும் மண்பாண்டங்களும் பூமியில் புதைந்து கிடந்து சமீப காலத்தில் கிடைத்திருக்கின்றன.

இந்தப் பூர்வீகக் குடிகளுக்குப் பிறகு சில மக்கள் நமது நாட்டில் வசித்து வந்ததாகத் தெரிய வருகிறது. நீலகிரிப் பிரதேசத்தில் வசித்துவரும் தோடர்கள், படகர்கள் அப் பூர்வீகக் குடிகளின் சந்ததியார்கள் ஆவர். மத்திய இந்தியாவில் வசிக்கும் பில்ஸ்களும் சந்தல்களும் பூர்வீகக் குடிகளின் சந்ததியார்கள் தான். அவர்கள் மிருக வேட்டையாடியும், நிலச்சாகுபடி செய்தும் கால்நடைகளை வளர்த்தும் வாழ்ந்து வந்தார்கள்.

இந்தப் பழங் குடிகளுக்குப் பிறகு, நமது தேசத்தில் திராவிடர்கள் என்ற ஒரு பெருங் கூட்டத்தார் வசித்து வந்தார்கள். அவர்கள் நமது தேசத்திலே இருந்தவர்களா அல்லது பிற நாடுகளிலிருந்து வந்தவர்களா என்பதைப் பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. அவர்கள் மிகத் தைரியசாலிகள். அவர்கள் தமிழ்ப் பாஷை பேசி வந்தார்கள். திராவிடர்கள் சேர, சோழ, பாண்டிய என்ற மூன்று ராஜ்யங்களைத் தென் இந்தியாவில் ஏற்படுத்திக் கொண்டு மிகச் சிறப்புடன் ஆண்டு வந்தார்கள். திராவிடர்களைப் பற்றிப் பின்னொரு பாடத்தில் இன்னும் விவரமாகச் சொல்லப்படும்.

நமது தேசத்தில் திராவிடர்கள் வசிக்கையில், மத்திய ஆசியாவில் வெகு காலமாய் வசித்துவந்த ஆரியர்கள் இந்துகுஷ் மலைப்பிரதேசங்களைத் தாண்டிக்கொண்டு சிந்து நதித் தீரத்திற்கு வந்தார்கள். அங்கு வசித்த

ஜனங்கள் ஆரியர்களை சிந்துச் சமவெளிக்கு வரவொட்டாமல் எதிர்த்தார்கள். அவர்களுக்குள் பல சண்டைகள் நடந்தன. அவைகளில் ஆரியர்கள் தங்கள் விரோதிகளைத் தோற்கடித்துக் கீழ்ப்படியும்படி செய்துகொண்டார்கள். இதன் மேல் வரலாறுகளை அடுத்த பாடத்தில் காண்க.

கேள்விகள்

1. வட இந்தியாவில் முதல் முதலில் ஜனங்கள் எங்கே வசித்தார்கள்?
2. இந்தியாவின் பூர்வீகக் குடிகளின் சந்ததியார்கள் யாவர்? அவர்கள் தற்காலம் எங்கே வசித்து வருகிறார்கள்?
3. ஆதிக்குடிகளுக்குப் பிறகு இந்தியாவில் வசித்தவர்கள் யாவர்?

---

3. ஆரியர்கள்

பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு, ஆரியர்கள் என்ற கூட்டத்தார் மத்திய ஆசியாவில் முதல் முதலில் வசித்து வந்தார்கள். அப்பிரதேசத்தில் குளிர் அதிகமாதலால் அவர்கள் கஷ்டமடைந்தார்கள். அங்கு மழை மிக்கக் குறைவானதால் உணவிற்கு வேண்டிய தானியங்கள் சாகுபடி ஆகவில்லை. புல். முளைத்துள்ள நிலங்களே எங்கும் இருந்தன. ஆதலால், ஆரியர்கள் ஒரே இடத்தில் தங்கி வசிக்காமல் ஆடுமாடுகளைப் புல் தரைகளில் ஓட்டி மேய்த்து வளர்த்து வந்தார்கள். மேற் கூறிய

காரணங்களால் ஆரியர்கள் மத்திய ஆசியாவை விட்டுப் பிற இடங்களுக்குப் போக எண்ணங் கொண்டார்கள்.

ஆரியர்களில் சிலர் கால் நடைகளை மேய்த்துக் கொண்டு இந்துகுஷ் மலைப் பிரதேசம் அடைந்தனர். பிறகு, அவர்கள் மலைக் கணவாய்களின் வழியாகச் சிந்து நதித் தீரத்திற்கு வந்தார்கள். ஆரியர்கள் குடும்பம் குடும்பமாய் அக்காலத்தில் பிரிந்து இருந்தார்கள். அநேக ஆரிய குடும்பத்தார்கள் சிந்து நதித் தீரத்தில் வசித்து வந்தார்கள். அப்பொழுது அங்கே வசித்து வந்த புராதன இந்திய மக்கள் குடியேற வந்த ஆரியர்களை எதிர்த்துச் சண்டை செய்தார்கள். கடைசியில் அவர்கள் ஆரியர்களை எதிர்க்க முடியாமல் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் தஸ்யுக்கள் அல்லது தாசர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

காலம் செல்லச் செல்ல, அநேக ஆரிய குடும்பத்தார்கள் மேன்மேலும் சிந்து நதித் தீரத்திற்கு வந்து வசிக்கலானார்கள். சிந்து நதித் தீரத்தில் ஆரியர்களின் எண்ணிக்கை வரவர அதிகமாயிற்று. ஆதலால், ஆரியர்களில் சிலர் கங்கை, யமுனை நதிகள் ஓடும் கிழக்குச் சமவெளிக்கும் சென்று வசிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு ஆரியர்களின் குடியேற்றம் கங்கைச் சமவெளியிலும் ஏற்பட்டது. வட இந்தியாவில் ஆரியர்கள் குடியேறின பாகத்துக்கு ஆரியவர்த்தம் என்று பெயர்.

ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறி வசித்து வந்தார்கள். அநேக நூற்றாண்டுகள் அவர்கள் தக்காணத்

திற்கும் தென் இந்தியாவிற்கும் வரவில்லை. இதற்குச் சில காரணங்கள் இருக்கக்கூடும். விந்திய, சாத்பூரா

மலைகளையும், ஆறுகளையும், மத்திய இந்தியாக் காடுகளை யும் தாண்டிக்கொண்டு அவர்கள் தக்காணத்திற்கு வர

வேண்டியிருந்தது. தவிர, கங்கை யமுனை நதிகள் ஓடும் பாகங்களில் ஜனங்கள் சுகமாக வாழ்வதற்கு ஏற்ற பல வசதிகளும் இருந்தன. அங்கு குடியேறின ஆரியர்கள் தக்காணத்திற்கும் தென் இந்தியாவிற்கும் வர அநேக நூற்றாண்டுகள் எண்ணங் கொள்ளவில்லை.

வட இந்தியாவில் குடியேறின ஆரியர்கள் புராதன மக்களுடன் நெருங்கிப் பழகி வந்தார்கள். காலக் கிரமத்தில் அவர்களுக்குள் விவாகச் சம்பந்தங்களும் ஏற்பட்டன. இவ்வாறு ஆரியர்கள் நாளடைவில் இந்தியாவின் பழங் குடிகளுடன் கலந்து விட்டார்கள். இந்த மக்களே 'இந்துக்கள்' ஆவர்.

ஆரியர்கள் குடியேறின பிறகு, வட இந்தியாவில் அநேக ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவற்றுள் **கோசலம், மகதம், விதேகம், பாஞ்சாலம்** முக்கியமானவை. அவைகளைப் பாதுகாத்துக் கொள்ள ஆரியர்களில் பலர் யுத்தப் பயிற்சியைக் கற்றுக்கொண்டனர். அந்த ஆரிய வகுப்பினருக்கு **க்ஷத்திரியர்கள்** என்று பெயர். சில ஆரியர்கள் கடவுள் வணக்கம் செய்து, ஆரிய சமூகத்துக்கு நன்மை உண்டாகும்படிச் செய்து வந்தார்கள். அவர்களுக்குப் **பிராமணர்கள்** என்று பெயர். இன்னும் சில ஆரியர்கள் நிலச்சாகுபடிச் செய்தும், வியாபாரம் செய்தும் வந்தார்கள். இந்த ஆரிய வகுப்பினருக்கு **வைசியர்கள்** என்று பெயர். இதர அவசியமான வேலைகளை இதர மக்கள் செய்துவந்தனர். அவர்கள் **சூத்திரர்கள்** ஆவர். இவ்வாறு ஆரிய சமூகத்

திற்குள் அவரவர்கள் தொழிலுக்குத் தக்கபடி பிரிவுகள் ஏற்பட்டன. அவைகளே நாளடைவில் ஜாதிப் பிரிவுகளாக மாறிவிட்டன. ஆனால், ஆரியர்கள் முதல் முதலில் சிந்து நதித் தீரத்தில் குடியேறி வசிக்கும்பொழுது, அவர்களுக்குள் ஜாதிபேதம் இருந்ததாகத் தெரியவில்லை.

கேள்விகள்

1. ஆரியர்களின் முதல் இருப்பிடம் எது? அவர்கள் அதை விட்டுப் பிற இடங்களுக்கு ஏன் சென்றார்கள்?
2. வட இந்தியாவில் ஆரியர்கள் எங்கே முதல் முதலில் தங்கி வசித்தார்கள்? பிறகு அவர்கள் வட இந்தியாவில் எங்கே குடியேறினார்கள்?
3. ஆரியர்கள் வட இந்தியாவில் ஏற்படுத்திய முக்கியமான ராஜ்யங்கள் எவை?
4. ஆரிய சமூகத்தில் எப்படி ஜாதிப் பிரிவுகள் உண்டாயின?

4. ஆரியர்கள் (தொடர்ச்சி)

முன் பாடத்தில் ஆரியர்களைப் பற்றிச் சில முக்கிய மான விஷயங்கள் மட்டும் சொல்லப்பட்டன. இப் பாடத்தில் ஆரியர்களின் கல்வி, மதம், பாஷை, நாகரிகம் இவற்றைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

ஆரியர்கள் பல குடும்பங்களாகப் பிரிந்து வாழ்ந் தார்கள். ஒவ்வொரு ஆரிய குடும்பத்திற்கும் தந்தையே தலைவர். ஆரிய குடும்பத்தில் மற்றவர்கள் அவருக்குட் பட்டு இருந்தார்கள். ஆரிய ஸ்திரீகள் மிகவும் கண்ணிய மாக நடத்தப்பட்டார்கள்.

ஆரியர்கள் நிலச்சாகுபடி செய்து வேண்டிய தானியங்களைத் தேடிக்கொண்டார்கள். ஆடு மாடுகளை வளர்த்துப் பால், வெண்ணெய் முதலிய பொருள்களை அடைந்தார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய உடை களையும் செய்துகொண்டார்கள். ஆரியர்கள் வாள், வில் முதலிய சண்டைக் கருவிகளைச் செய்து அவை களைச் சண்டைக் காலங்களில் உபயோகித்தார்கள். ஆரியர்கள் குடும்பத்திற்கு வேண்டிய மண் பாண்டங் களையும் தாங்களே செய்து கொண்டார்கள். பொதுவாக ஆரியர்கள் சுகமாய் வாழ்வதற்கு வேண்டியவற்றை யெல்லாம் தாங்களே செய்து கொண்டார்கள். அவர்கள் கங்கை நதித் தீரத்தில் குடியேறினதும் ஆரிய சமூகத் திற்குள் ஜாதிப் பிரிவுகள் ஏற்பட்டு விட்டன. இதைப்பற்றி முன் அத்தியாயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆரியர்கள் தெய்வ பக்தி உள்ளவர்கள். அக்னி, வாயு முதலானவற்றைத் தெய்வங்களாகப் பாவித்துத் தொழுது வந்தார்கள். ஆரியர்களுக்கு அக்னியே முதல் தெய்வம். அவர்கள் அக்னி மூலமாக நெய், அன்னம் இவைகளைத் தெய்வங்களுக்கு அளித்து வணங்கி வந்தார்கள். ஆரியர்கள் தெய்வங்களை வணங்கச் சில பாடல்களையும் இயற்றிக்கொண்டார்கள். அவைகளை அவர்கள் சுவரத்துடன் பாடி வந்தார்கள். கடவுளை வணங்குவதற்கு இயற்றப்பட்ட பாடல்கள் அடங்கிய மத நூலை வேதம் என்கிறோம். முதல் முதலில் வேதகீதங்களை ஆரியர்கள் எழுதி வைக்கவில்லை. அவற்றை அவர்கள் மனப்பாடம் செய்து வந்தார்கள்; பிறருக்கும் மனப் பாடம் செய்வித்தார்கள். பிறகு எழுத்தாணியைக்கொண்டு அவைகளைப் பனை ஓலைகளில் எழுதிவைத்தார்கள்.

ஆரியர்கள்பஞ்சாபில் குடியேறினபிறகு, அவர்கள் ரிக் வேதம் என்ற மத நூலை சமஸ்கிருத பாஷையில் இயற்றினார்கள். அது தான் ஆரியர்களால் முதன் முதலாக இயற்றப்பட்ட மத நூலாகும். அவர்கள் கங்கைச் சமவெளியில் குடியேறின பின், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற இதர மூன்று வேதங்களையும் சமஸ்கிருத பாஷையில் இயற்றினார்கள். யாக காலங்களில் ஓதும் பாடல்கள் யஜுர் வேதத்தில் உள்ளன. சாம வேதத்தில் யாக காலங்களில் தேவர்களை வணங்க ஓத வேண்டிய பாடல்கள் அடங்கி உள்ளன. அதர்வண வேதத்தில் மந்திர சாஸ்திரம் அடங்கியுள்ளது.

ஆரியர்கள் பஞ்சாபில் வசிக்கும் பொழுது அவர்கள் கடவுளுக்காகக் கோவில்களைக் கட்டவில்லை. கற்சிலைகளைக் (விக்கிரகங்களை) கோவில்களில் வைத்துத் தொழவுமில்லை. நாளடைவில் அவர்கள் இதர மக்களுடன் கலந்து விட்டதனால் அவர்களுடைய மதக் கொள்கைகளும் அபிப்பிராயங்களும் மாறுதல் அடைந்து வந்தன. அவர்கள் கங்கைச் சமவெளியில் குடியேறின பிறகு, கோவில்களைக் கட்டிக் கொண்டார்கள். அவைகளில் கற்சிலைகளையும் வைத்துத் தொழுது வந்தார்கள். ஆரியச் சிறுவர்கள் அறிவுடைய பெரியார்களை அடைந்து, அவர்களுடைய போதனைகளைக் கேட்டு வந்தார்கள். அக்காலத்தில் ஆரியர்களுள் மத அறிவு மிகுந்த பலர் இருந்து வந்தனர். அவர்களே ரிஷிகள் அல்லது முனிவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆரிய சமூகத்தின் நன்மைக்காகத் தெய்வ வணக்கம் செய்து வந்த ஆரியர்களே பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நான்கு வேதங்களையும் இதர மத நூல்களையும் கற்று அதிக மத அறிவைப் பெற்றிருந்தார்கள்; தவிர, இதர ஆரிய வகுப்பினர்களுக்கும் மத போதனை செய்தும் வந்தார்கள். அதனால் அக்காலத்திய பிராமணர்களுக்கு அதிகக் கண்ணியமும் செல்வாக்கும் உண்டாயின.

நான்கு வேதங்களைத் தவிர, ஆரியர்கள் இதிகாசங்கள், புராணங்கள் முதலான மத நூல்களைச் சமஸ்கிருத பாஷையில் இயற்றியுள்ளார்கள்.

இதிகாச நூல்கள் இரண்டு. அவை இராமாயணமும், மஹா பாரதமும் ஆவன. இராமாயணம் என்ற இதிகாசத்தை வால்மீகி என்ற ஒரு பெரிய முனிவர் சமஸ்கிருத பாஷையில் இயற்றினர். மஹாபாரதம் வியாஸர் என்ற ஒரு சிறந்த முனிவரால் சமஸ்கிருத பாஷையில் இயற்றப் பட்டுள்ளது. புராணங்கள் பதினெட்டு. இதிகாசங்களையும், புராணங்களையும் படித்து, அவற்றில் அடங்கியுள்ள நல்ல நீதிகளையும் படித்து, அவற்றில் அடங்கியுள்ள நல்ல நீதிகளை யாவரும் தெரிந்துகொள்ளலாம். இப்பொழுது அநேகர் இதிகாசங்களையும் புராணங்களையும் வாசிக்கச் செய்து, இந்து மதத்தைப் பற்றின அறிவைப் பெற்று வருகிறார்கள்.

கேள்விகள்

1. ஆரியர்களின் உடை, தொழில், பாஷை, மதம் இவற்றைப் பற்றி மிகச் சுருக்கமாக எழுதுக.
2. வேதங்கள் எத்தனை? அவை எந்தப் பாஷையில் இயற்றப்பட்டன?
3. கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைக்க.

   1. இராமாயணம் ஒரு ———. அது ——— என்ற ஒரு முனிவரால் ——— பாஷையில் இயற்றப்பட்டது.
   2. வியாஸர் ——— என்ற இதிகாஸத்தை இயற்றினர்.
   3. புராணங்கள் ———. அவை நல்ல ——— கற்பிக்கின்றன.

5. புத்த மதம்

முன் பாடங்களில் பிராமணர்கள் ஆரிய சமூகத்தின் நன்மைக்காகத் தெய்வ வணக்கம் செய்து வந்தார்கள் என்று வாசித்தீர்கள். ஆரிய மதம் பிராமண மதமாக மாறிற்று. பிராமணர்கள் மிகுந்த மத அறிவைப் பெற்று இருந்தார்கள்; பிறருக்கு மத போதனை செய்தும் வந்தார்கள். ஆதலால் ஆரிய சமூகத்தில் பிராமணர்கள் செல்வாக்கு அடைந்தார்கள். பிராமணர்களைத் தவிர, இதர ஆரியர்கள் வேதங்களைப் படிக்கக்கூடவில்லை; யாகங்களைச் செய்யக் கூடவில்லை. இதனால் இதர ஆரியர்கள் பிராமணர்களிடம் மிகவும் அதிருப்தி அடைந்தார்கள்.

புத்தர்

ஆகையால் பிராமணர்கள் போதித்து வந்த மதத்தை இதர ஆரியர்கள் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்க

வில்லை. அவர்கள் வேறு புது மார்க்கங்களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள். இவ்வாறு மத விஷயங்களில் பற்றுதல் உள்ளவர்கள் நற்கதி அடையப் புதிய வழிகளைப்பற்றி ஆலோசிக்கலானார்கள். அதன் பயனாகப் புத்த மதம், ஜயின மதம் என்ற இரண்டு புதிய மதங்கள் வட இந்தியாவில் தோன்றின. இப் பாடத்தில் புத்த மதத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறது.

சுமார் கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டு களுக்கு முன்பு புத்த மதம் சித்தார்த்தர் என்ற ஒரு அரச குமாரரால் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் சாக்கிய நாட்டை ஆண்டு வந்த சித்தோதனர் என்பவரின் புதல் வர். அவர் இளம்பிராயத்திலேயே யுத்தப் பயிற்சியைக் கற்றுக் கொண்டார். பிறகு அவருடைய விவாகம் நடந் தது. அவர் சில வருஷங்கள் இல்லற வாழ்க்கையை நடத்திவந்தார்.

சித்தார்த்தர், மனிதர்கள் வியாதியாலும் இன்னும் பல துன்பங்களாலும் கஷ்டப்படுவதைக் கண்டார். அதனால் அவர் உலக வாழ்க்கையின் துன்பங்களை ஒழிக்க ஒரு சிறந்த வழியைக் கண்டுபிடிக்க ஆசை கொண்டார். அதுமுதல் அவருடைய மனது அவ் வழியை நாடிச் சென்றது. இக் காரணத்தினால் சித்தார்த்தர் ஓரிரவில் தம் மனைவி, மக்கள் யாவரையும் அரண்மனையிலே விட்டு விட்டுக் காட்டிற்குப் போய் விட்டார். அங்கே உண்மை அறிவை அடைய அலைந்து திரிந்தார். கடைசியில் அவர் உருவேலா என்னும் காட்டில்

அலைந்து திரிந்து தபசு செய்யத் தொடங்கினர். அங்கு ஒரு மரத்தின் கீழ் அவர் தவம் செய்துகொண்டிருக்கையில் திடீரென அவருக்கு மத ஞானம் உதயமாயிற்று. அவர் தமக்கு உண்டான ஞானத்தைப் பிறருக்கும் போதனை செய்யவேண்டும் என்று தீர்மானித்தார். அதுமுதல் சித்தார்த்தருக்குப் புத்தர் என்ற பெயர் வழங்கி வருகிறது. எந்த மரத்தின் கீழ் சித்தார்த்தருக்கு உண்மை அறிவு (மத ஞானம்) ஏற்பட்டதோ, அம் மரத்திற்குப் போதி மரம் என்ற பெயர் வழங்கி வருகிறது.

புத்தர் கண்டு பிடித்த மதத்திற்குப் புத்த மதம் என்பது பெயர். அம்மதத்தின் முக்கியக் கொள்கைகள் பின்வருமாறு :—

1. உலக வாழ்க்கையின் கஷ்டங்களை நீக்க ஆசையை ஒழிக்கவேண்டும். ஆசையை ஒழிக்க ஒவ்வொருவரும் தம் எண்ணம், வார்த்தை, செய்கை இவற்றில் சுத்தமாயிருக்க வேண்டும்.

2. ஜீவன் அல்லது உயிர் உள்ள எந்தப் பிராணிகளையும், விலங்குகளையும் கொல்லக்கூடாது.

3. புத்த மதத்தில் ஜாதி பேதம் என்பது கிடையாது. யாவரும் ஜாதி பேதமின்றிப் புத்த மதத்தில் சேரலாம்.

புத்தர் மேற்கூறிய கொள்கைகளை ஜனங்களுக்குப் போதித்து வந்தார். மகதம், கோசலம் முதலான நாடுகளில் அவர் தாம் கண்டு பிடித்த புதிய மதத்தின்

கொள்கைகளை உபதேசம் செய்து வந்தார். அநேகர் புத்த மதத்தில் நம்பிக்கை வைத்து அதைத் தழுவினர்கள். சிலர் அவருடைய சிஷ்யர்களாகவும் ஆனர்கள்.

புத்த மதம் வட இந்தியாவில் கங்கை நதித் தீரத்திலுள்ள எல்லா நாடுகளிலும் வெகு சீக்கிரத்தில் பரவியது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. பிராமண மதத்தில் அதிருப்தி அடைந்த க்ஷத்திரியர்கள் முதலானவர்கள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புத்த மதத்தில் வெகு ஆவலுடன் சேர்ந்து கொண்டார்கள்.

2. சாமானிய மக்கள் புத்த மதக் கொள்கைகள் மிகச் சுலபமாய்ப் பின்பற்றக்கூடியவை என்று நினைத்தார்கள்.

3. பிராமண மதத்தில் உள்ள ஜாதி பேதத்தினல் அதிருப்தி அடைந்தவர்கள், புத்த மதத்தில் ஜாதி வித்தியாசம் இல்லாததால் அதைத் தழுவினர்கள்.

4. புத்தரும், அவருடைய சிஷ்யர்களும் மத போதனை செய்யத் துறவிகளின் சங்கங்களை ஏற்படுத்தினர்கள்; புத்தத் துறவிகளுக்காக மடங்களையும் கட்டுவித்தார்கள்.

5. வட இந்தியாவில் மிகச் செல்வாக்குடன் இருந்த மன்னர்களும் புத்த மதத்தை ஆதரித்து வந்தார்கள்; தங்களுடைய நாடுகளில் புத்த மதம் பரவுவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்தார்கள்.

நமது தேசத்தில் புத்த மதம் தற்காலத்தில் க்ஷீண தசை அடைந்துவிட்டது. ஆனால், அது பர்மா, சீன தேசம், ஜப்பான், ஸிலோன் முதலான தேசங்களில் இப்பொழுது முக்கிய மதமாக இருந்து வருகிறது. வட இந்தியாவில் அரசாண்ட அசோக சக்கரவர்த்தி புத்த மதத்தைப் பிற நாடுகளில் பரவச் செய்தார்.

நாளடைவில் புத்த மதம் நமது தேசத்தில் பல பாகங்களில் க்ஷீணித்து விட்டது. காலக்கிரமத்தில் ஜனங்கள் புத்த மதத்தின் கொள்கைகளின்படி மிகச் சுலபமாய் நடக்கலாம் என்று எண்ணியது சரியில்லை என்பதைத் தெரிந்து கொண்டார்கள். தவிர, அன்னியர்களுடைய படையெழுச்சிகளால் உண்டான குழப்பத்தாலும் புத்தமதம் பரவுவதற்கு இடையூறுகள் உண்டாயின. நாளடைவில், ஜனங்களுக்கும் முதல் முதலில் புத்த மதத்தில் ஏற்பட்ட பற்றுதலும் குறைந்து விட்டது.

புத்த மதம் ஏற்பட்டதால் பிராமண மதத்தில் சில மாறுதல்கள் தோன்றலாயின. புத்த மதத்தினர் புத்தரையே தெய்வமெனக் கொண்டாடினார்கள். புத்த மதத்தினர் புத்தருடைய உருவச் சிலைகளைத் தயாரித்துக் கோயில்களில் அமைத்துத் தொழுது வந்தார்கள். இதனால் நமது தேசத்தில் விக்கிரக ஆராதனை செய்தல் என்ற வழக்கம் பரவலாயிற்று. மேலும், புத்த மதம் பரவியதால் ஜன சமூகத்தில் பொறுமையும், சாந்த குணமும் பரவின. ஜீவராசிகளை இம்சித்தல்

கூடாது என்ற மேலான உணர்ச்சி நமது நாடெங்கும் பரவிற்று.

கேள்விகள்

1. புத்த மதத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. புத்த மதத்தின் முக்கியக் கொள்கைகள் யாவை?
3. புத்த மதம் இந்தியாவில் எக்காரணங்களால் சீக்கிரம் பரவிற்று?
4. நாளடைவில் புத்தமதம் எப்படி க்ஷீண தசை அடைந்தது?

---

6. ஜயின மதம்

முன் அத்தியாயத்தில் புத்த மதத்தைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள். அநேகமாக அதே காலத்தில் வட இந்தியாவில் வேறு ஒரு மதம் ஏற்பட்டது. அதற்கு ஜயின மதம் என்பது பெயர். சுமார் 2500 வருஷங்களுக்கு முன்பு ஜயின மதம் வட இந்தியாவில் வர்த்தமானர் என்ற் ஒரு க்ஷத்திரிய வீரரால் மிகவும் சிறப்படைந்தது.

கி. மு. 6-வது நூற்றாண்டில் வர்த்தமானர் ஜயின மதத்தை முதன்மை அடையும்படிச் செய்தார். அவர் கி. மு. 595-ல் வைசாலியில் சித்தார்த்தர் என்ற ஒரு க்ஷத்திரிய மன்னரின் புதல்வராகப் பிறந்தார். அவர் முப்பதாவது வயதில் தம் பெற்றோர் களை இழந்தார். அதன் பிறகு அவர் உலக இன்பங்களை

வெறுத்து நிர்கிராந்தர் (துறவி) ஆனர். அவர் பத்து வருஷங்களுக்கு மேல் மகத நாட்டில் அலைந்து திரிந்து மத ஞானம் பெற முயற்சி செய்து வந்தார். அவருக்கு 42-வது வயதில் மத ஞானம் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

ஜயின மதத்தின் முக்கியக் கொள்கைகள் :—

1. மக்கள் நற்கதியடைவதற்குத் தேக சுகத்தைத் தேடக்கூடாது. தேகம் அழிந்தால் ஆத்மா விடுதலை அடையும். அதாவது நற்கதி பெறலாம்.

2. நற்கதி பெற நல்ல நடத்தை, உண்மை பேசுதல், பரிசுத்தமான வாழ்க்கை அவசியமாகும்.

3. ஜீவ ஹிம்சை அல்லது உயிர்வதை செய்தல் கூடாது.

4. கடவுளால் படைக்கப்பட்ட மக்களுக்குள் ஜாதி பேதம் இல்லை.

அவர் முப்பது வருஷங்கள் மகதம், விதேகம், கோசலம் முதலான ராஜ்யங்களில் ஊர் ஊராய்ச் சென்று தாம் கண்டுபிடித்த ஞான மார்க்கத்தை ஜனங்களுக்குப் போதித்து வந்தார். அநேக க்ஷத்திரியர்கள் அவருடைய சீடர்களானர்கள். இவ்வாறு அவர் ஜயின மதம் என்ற புதிய மதத்தைப் பரவச் செய்தார். அவர் பாட்ன ஜில்லாவில் பாவா என்னுமிடத்தில் கி. மு. 527-ல் தேக வியோகமானர்.

ஜயினர்கள் தங்கள் மதத்தின் கொள்கைப்படி கொடிய தவங்களையும், விரதங்களையும் அனுஷ்டிக்க நேர்ந்தது. இதனால் சரீர சுகம் குறைந்து வந்தது. இக் காரணங்களால் ஜனங்களுக்கு ஜயின மதத்தின் மீதுள்ள பற்றுதல் குறைந்தது. அதனால் ஜயின மதம் புத்த மதத்தைப் போல் சீக்கிரம் பரவவில்லை. தற் காலத்தில் சில மக்கள் மட்டும் ஜயின மதத்தைத் தழுவி வருகின்றனர். அவர்கள் பல கிராமங்களில் வசித்து வருகின்றனர்; அநேகக் கோயில்களைக் க்ட்டி விக்கிரக ஆராதனை செய்து வருகிறார்கள்.

கேள்விகள்

1. ஜயின மதத்தின் முக்கியக் கொள்கைகள் யாவை?
2. ஜயின மதம் இந்தியாவில் ஏன் அதிகமாய் பரவக்கூட வில்லை?
3. ஜயின மதத்திற்கும் புத்த மதத்திற்கும் உள்ள ஒற்றுமை வித்தியாசங்களைத் தெரிந்த வரையில் சொல்லுக.

7. அலெக்ஸாண்டர்

கிறிஸ்து பிறப்பதற்கு 320 ஆண்டுகளுக்கு முன்பு நமது தேசத்தின் வடமேற்குப் பாகத்தின்மீது ஒரு சிறந்த யுத்த வீரர் படையெடுத்து வந்தார். அவருடைய பெயர் அலெக்ஸாண்டர். அவர் தென் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள "கிரீஸ், தேசத்தின் மன்னர். அவர் அநேக நாடுகளை ஜயித்துத் தாம் ஆள வேண்டும் என்று ஆசை கொண்டார்.

அலெக்ஸாண்டர்

அக்காலத்தில் மேற்கு ஆசியாவில் பாரசீக சாம்ராஜ்யம் மிகச் சிறப்புற்று இருந்தது. கிரேக்க அரசரான அலெக்ஸாண்டர் பாரசீக சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து அதை ஜயித்துக் கொண்டார். பிறகு, அவர் பல சிறிய நாடுகளையும் ஜயித்துக்கொண்டு, கைபர் கணவாயின் வழியாகச் சிந்து நதி பாயும் பஞ்சாப் மாகாணத்திற்கு ஒரு பெரிய சேனையுடன் வந்தார். அச்சமயம்



அலெக்ஸாண்டர் வந்து சென்ற வழி

பஞ்சாப் பல சிறிய நாடுகளாகப் பிரிந்திருந்தது. அம்பி என்ற ஒரு அரசர் அவரை எதிர்த்துச் சண்டை செய்தார். நடந்த சண்டையில் அம்பி தோல்வி அடைந்ததால் அவர் அலெக்ஸாண்டரிடம் கீழ்ப் படிந்தார்.

இதன் பிறகு, அலெக்ஸாண்டர் ஜீலம் நதிக்குக் கிழக்கேயுள்ள நாட்டின் மீதும் படையெடுத்தார். அங்கு புருஷோத்தமர் (போரஸ்) என்ற மிகத் திறமையுள்ள ஒரு மன்னர் ஆட்சி புரிந்து வந்தார். அவர் அலெக்ஸாண்டரைப் போல ஒரு யுத்த வீரர். அவர் அலெக்ஸாண்டரை எதிர்த்துச் சண்டை செய்ய ஒரு பெரிய சேனையைச் சேகரித்துக் கொண்டார். அச்சமயம் ஜீலம் நதியில் தண்ணீர் கரை புரண்டு ஓடியதால் அலெக்ஸாண்டர் அதைக் கடக்க முடியவில்லை. அதனல் அதன் மேற்குக் கரையிலே அவர் தங்கும்படி நேரிட்டது. பிறகு அலெக்ஸாண்டர் தாம் தங்கின இடத்திற்கு வடக்கே ஜீலம் நதியைச் சுலபமாய்க் கடந்துவிடலாம் என்று கேள்விப்பட்டார். ஆகையால், அவர் தம் சைன்யத்துடன் சென்று படகுகளைப் பாலமாக உபயோகித்து ஜீலம் நதியைத் தம் போர் வீரர்களுடன் கடந்தார். மறு நாட்காலையில் புருஷோத்தமருக்கும் அலெக்ஸாண்டருக்கும் ஜீலம் நதிக் கரையிலே ஒரு சண்டை மிகக் கடுமையாக நடந்தது. அதில் புருஷோத்தமர் மிகத் தைரியமாகச் சண்டை செய்தார். அவர் கட்சியிலுள்ள யானைகள் போர்க்களத்தில் வெருண்டு திரும்பி ஓடினதால், அநேக இந்திய வீரர்கள் யானைக் கால்களில் மிதியுண்டு மாண்டார்கள். புருஷோத்தமரின் கட்சி

தோல்வியடைந்தது. அலெக்ஸாண்டர் அவரது வீரத் தனத்தைக் கண்டு மெச்சி, "உம்மை நான் எப்படி நடத்தவேண்டும்?" என்று அவரைக் கேட்டார். அதற்குப் புருஷோத்தமர் தம்மை ஒரு அரசரைப் போல் கண்ணியமாய் நடத்தவேண்டும் என்றார். ஆகையால், அலெக்ஸாண்டர் தயாள குணத்துடன் புருஷோத்தமரைத் தம் நாட்டில் முன் போல அரசாளும்படி ஏற்பாடு செய்தார்.

இதன் பிறகு, அவர் கங்கை நதித் தீரத்திலுள்ள மகத ராஜ்யத்தின் மீது படையெடுக்க உத்தேசித்தார். ஆனல், கிரேக்கப் போர்வீரர்கள் தங்களுடைய தாய்நாட்டிற்குத் திரும்பிப் போக வேண்டும் என்று அலெக்ஸாண்டரிடம் தெரிவித்தார்கள். ஆகையால் அவர் சிந்து நதிக் கரையோரமாகவே தம் சைன்யத்துடன் அரபிக் கடற்கரையை நோக்கிச் சென்றார். பிறகு அவர் பாரசீக ராஜ்யத்தின் வழியாகத் தமது நாட்டிற்குத் திரும்பிப் போனர். போகும் வழியில் அவர் பாரசீகத்திலுள்ள பாபிலன் என்னும் பட்டணத்தில் இறந்தார்.

அலெக்ஸாண்டருடைய இந்தியப் படையெழுச்சிக்குப் பிறகு, கிரீஸுக்கும் இந்தியாவுக்கும் மக்கட் போக்குவரவும் வியாபாரமும் ஏற்பட்டன. கிரேக்கர்களின் ஆட்சி முறைகளையும், கலைகளையும், சிற்ப வேலைகளையும் இந்தியர்கள் கற்றுக் கொண்டார்கள். வட மேற்குப் பாகத்தில் உள்ள சில சிறிய மலை நாடுகள் கிரேக்கர்களின் ஆளுகையின் கீழ் இருந்து வந்தன.

ஆனால், இந்தியாவின் பெரும் பாகத்தில் அரசாங்க நிலைமை அலெக்ஸாண்டரின் படையெழுச்சியால் சிறிதேனும் மாறுதல் அடையவில்லை.

கேள்விகள்

1. அலெக்ஸாண்டர் என்பவர் யார்? அவர் ஏன் இந்தியாவின் மீது படையெடுத்தார்?
2. பஞ்சாபில் அலெக்ஸாண்டரை எதிர்த்த இந்திய அரசர்கள் யாவர்?
3. அலெக்ஸாண்டர் இந்தியாவில் செய்த பெரிய சண்டை எங்கே நடந்தது? அதில் யார் தோல்வியடைந்தார்?
4. அலெக்ஸாண்டர் மகத ராஜ்யத்தின் மீது ஏன் படையெடுக்கவில்லை?
5. அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படை எடுத்ததால் உண்டான நன்மை தீமைகள் யாவை?

8. மகத ராஜ்யத்தின் முன்னேற்றம்

சிசுநாக வம்சத்தாரின் ஆளுகை (கி.மு. 650—371)

கிறிஸ்து பிறப்பதற்கு 650 வருஷங்களுக்கு முன்பு வட இந்தியாவில் கங்கை நதித் தீரத்தில் **மகதம்** என்ற ஒரு ராஜ்யம் மிகச் சிறப்புடன் இருந்தது. அந்த ராஜ்யத்தில் சிசுநாக வம்சத்து அரசர்கள் கி. மு. 371 வரையில் ஆண்டுவந்தார்கள். அந்த வம்சத்து அரசர்களில் பிம்பிசாரர், அஜாதசத்ரு என்ற இருவரும் முக்கியமானவர்கள்.

பிம்பிசாரர்:-சிசுநாக வம்சத்தின் ஐந்தாவது மன்னர் பிம்பிசாரர். அவர் ராஜகிருஹா என்ற பட்டணத்தை உண்டாக்கினர். அது மகத ராஜ்யத்தின் தலைநகரமாக ஆயிற்று. அவர் அங்க முதலான நாடுகளை ஜயித்துத் தம்முடைய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். பிம்பிசாரரின் ஆட்சிக் காலத்தில் வர்த்தமானரும், புத்தரும் தங்களுடைய மதக் கொள்கைகளை வட இந்தியாவில் போதனை செய்து வந்தார்கள். ஆதலால் புத்த, ஜயின மதங்கள் மகத ராஜ்யத்தில் பரவி வந்தன.

அஜாதசத்ரு:—பிம்பிசாரரின் புதல்வர் அஜாதசத்ரு. அவர் கி. மு. 495-ல் மகத நாட்டின் சிங்காதனமேறினர். அவர் கோசல மன்னருடன் சண்டை செய்தார். அவர் பாடலிபுத்திரம் என்ற பட்டணத்தை உண்டாக்கினர். அதையே மகத ராஜ்யத்தின் தலை நகரமாகச் செய்து கொண்டார்.

நந்த அரசர்கள் (கி. மு. 371—321)

சிசுநாக வம்சத்தாருக்குப் பின், மகத ராஜ்யத்தை நந்தர்கள் என்ற ஒரு வகுப்பினர் ஆண்டு வந்தார்கள். மகா பத்ம நந்தர் அந்த ராஜ வம்சத்தின் முதல் மன்னர். நந்தர்கள் கி. மு. 371 முதல் ஐம்பது வருஷ காலம் மகத ராஜ்யத்தில் ஆண்டு வந்தார்கள்; அக்காலத்தில் கிரேக்கர்களும் மகத ராஜ்யத்தைப் பற்றிக் கேள்விப் பட்டார்கள். அவர்களது ஆளுகையைப் பற்றி நமக்கு அதிகமாய்த் தெரியவில்லை. நந்த வம்சத்தின் கடைசி மன்னரைச் சந்திர குப்தர் என்ற போர்த் திறமை வாய்ந்த ஒரு அரச குமாரர் சண்டையில் தோற்கடித்தார். மகத ராஜ்யத்தில் நந்த வம்சத்தாரது ஆளுகை கி. மு. 321-ல் அழிந்தது.

கேள்விகள்

1. அலெக்ஸாண்டர் படையெடுத்த காலத்தில் வட இந்தியாவில் எந்த ராஜ்யம் முன்னேற்றம் அடைந்திருந்தது? அதன் தலைநகரம் எது? அதை ஆண்டு வந்த சிசு நாக வம்சத்து அரசர்களில் இரண்டு பெயரைச் சொல்லுக.
2. கி. மு. 321-ல் மகத ராஜ்யத்தை யார் ஜயித்துக்கொண்டார்?

9. மௌரிய சந்திரகுப்தர்

(கி. மு. 321–297)

மகத ராஜ்யத்தில் நந்த அரசர்களின் ஆளுகையை முடிவுக்குக் கொண்டு வந்தவர் சந்திரகுப்தர். அவர் கடைசி நந்த அரசரைக் கி. மு. 321-ல் தோற்கடித்து, மகத ராஜ்யத்தை ஜயித்துக் கொண்டார். அவர் "மூரா" என்ற ஸ்திரீயின் புதல்வர். ஆகையால் அவருடைய வம்சத்திற்கு **மௌரிய வம்சம்** என்ற பெயர் வழங்கி வருகின்றது. அவரால் வட இந்தியாவில் ஸ்தாபனம் செய்யப்பட்ட ராஜ்யத்திற்கு அதே காரணத்தினல் **மௌரிய ராஜ்யம்** என்ற பெயர் வழங்கி வருகிறது. சந்திர குப்தருக்கு வட இந்தியாவில் ஒரு பெரிய ராஜ்யம் ஏற்படுத்துவதில் **சாணக்கியர்** என்ற அதிகச் சாமர்த்திய முள்ள ஓர் பிராமணர் பேருதவி செய்துவந்தார். மௌரிய ராஜ்யத்தில் சாணக்கியர் அவருடைய மந்திரியாக சில வருஷங்கள் அரசாங்க நிர்வாகத்தை நடத்த உதவி புரிந்தார்.

ஸெலூக்கஸ் நிகடாருக்கும், சந்திர குப்தருக்கும் நடந்த சண்டை:-

சந்திரகுப்தர் மகதச் சிங்காதன மேறிச் சுமார் 10 வருஷங்களுக்கு பின் கி. மு. 305-ல் அலெக்ஸாண்டரின் கீழிருந்த கிரேக்கத் தளகர்த்தர்களில் ஒருவராகிய **ஸெலூக்கஸ்**, நாடுகளை மறுபடியும் ஜயிக்க நினைத்து பெரிய சைன்யங்களுடன் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்தார். இதையறிந்த சந்திரகுப்தர் ஒரு

பெரிய சைன்யத்துடன் கிரேக்கர்களை எதிர்த்தார். நடந்த சண்டையில் கிரேக்கத் தளகர்த்தரான ஸெலூக்கஸ் தோல்வியடைந்தார். சந்திரகுப்த மௌரியரும், கிரேக்கச் சேனைத் தலைவரும் சமாதானம் செய்துகொண்டார்கள். அதன்படி சந்திரகுப்தர் ஸெலூக்கஸின் குமாரத்தியைக் கலியாணம் செய்து கொண்டார். அவர் பாடலிபுத்திரத்தில் ஒரு கிரேக்கரை ராஜ தூதராக வைத்துக் கொள்ளச் சம்மதித்தார். சந்திரகுப்தரின் காலத்தில் மெகஸ்தனீஸ் என்பவர் முதல் கிரேக்க தூதராக பாடலிபுத்திரத்துக்கு அனுப்பப்பட்டார். அவர் சில வருஷங்கள் மகத ராஜ்யத்தில் இருந்ததனால், பாடலிபுத்திரத்தைப்பற்றியும், சந்திரகுப்தரின் ஆளுகையைப் பற்றியும் விவரமாக எழுதி வைத்தார். அந்த வரலாறு, சந்திரகுப்தரின் ஆட்சியைப்பற்றி நாம் அறிந்து கொள்ளத் தற்காலம் ஓர் ஆதார நூலாக உதவுகிறது.

மௌரிய ராஜ்யம் :—சந்திரகுப்தருக்கு வட இந்தியா முழுவதையும் ஜயித்துத் தாமே அதன் சக்கரவர்த்தியாய் விளங்கவேண்டும் என்பது எண்ணம். ஆகையால், அவர் வட இந்தியாவிலுள்ள அநேக மாகாணங்களை ஜயித்துத் தமது ராஜ்யத்தை மிகப் பெரிதாகச் செய்து கொண்டார். அவருடைய ராஜ்யம் வடக்கே இமயமலைகள் முதல் தெற்கே விந்திய மலை வரையிலும் பரவி இருந்தது. இதுவரையில் வட இந்தியா முழுவதும் ஒரே மன்னரின் ஆளுகையின் கீழ் இருந்ததில்லை. தம் ராஜ்யத்தின் பாதுகாப்பிற்காக அவர் ஒரு பெரிய

சைன்யத்தையும் வைத்திருந்தார். அவரது சைன்யத்தில் 60,000 காலாட்படை வீரர்களும், 30,000 குதிரை வீரர்களும், 9,000 யானை வீரர்களும் இருந்தார்கள்.

பாடலிபுத்திரம் :— மௌரிய ராஜ்யத்திற்குப் பாடலிபுத்திரம் தலை நகராய் இருந்தது. அது ஒன்பது மைல் நீளமும், ஒன்றரை மைல் அகலமும் உள்ள ஒரு நகரம். அதன் நடுவிலே ஒரு பலமான கோட்டை இருந்தது. அக் கோட்டைக்குள் சக்கரவர்த்தியின் அரண்மனை கட்டப்பட்டிருந்தது. எல்லா ஜாதி ஜனங்களும் அந் நகரில் வசித்து வந்தார்கள். கோயில்களும், வைத்திய சாலைகளும், ஆயுதசாலைகளும் அங்கே கட்டப்பட்டிருந்தன. அரசர், தங்கப் பல்லக்கு, ரதம், யானை என்ற இவற்றில் ஒன்றின் மீது ஏறி அதன் அகலமான வீதிகளில் ஊர்வலம் வருவது வழக்கம்.

சந்திரகுப்தர் செய்த நற்காரியங்கள்:— அவர் அடிக்கடி தம் குடிகளின் குறைகளைக் கேட்டு அவைகளை நீக்கி வந்தார். அவர் நிலச் சாகுபடிக்கு உதவும் பொருட்டு அநேக ஏரிகளையும், வாய்க்கால்களையும் வெட்டுவித்தார். அவருடைய காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளில் சுதர்சன என்ற ஏரி மிகவும் பெரியது. பாசன வசதிகள் செய்யப்பட்டமையால் மௌரிய ராஜ்யத்தில் விவசாயம் மேன்மேலும் அபிவிருத்தி அடைந்தது. தவிர, மக்கள் போக்குவரவுக்கும் வியாபாரத்திற்கும் உதவும்படி அவர் அநேக சாலைகளைப் போட்டுவித்தார். அவைகளில் வழிப்போக்கர்களுக்கு உதவும்படி மைல்

கற்களையும் நட்டுவைக்கும்படி செய்தார். இவ்வாருக சந்திரகுப்தர் தம் குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து புகழ் பெற்ருர். அவர் கி. மு. 297-ல் மரண மடைந்தார்.

கேள்விகள்

1. சந்திரகுப்தர் எப்படி ஒரு பெரிய மன்னராவர்?
2. அவர் காலத்தில் பாடலிபுத்திரத்திலிருந்த கிரேக்க தூதர் யார்?
3. சந்திரகுப்தர் தம் குடிகளுக்கு என்ன நன்மைகளைச் செய்தார்?
4. சந்திரகுப்தரை எப்படி அலெக்ஸாண்டருக்கு ஒப்பிட லாம்?

---

10. அசோக சக்கரவர்த்தி

[கி. மு. 272—கி. மு. 232].

சந்திரகுப்தருக்குப் பிறகு மகத ராஜ்யத்தை அவரது புதல்வரான பிந்துசாரர் இருபது வருஷங்கள் (கி. மு. 292—கி. மு. 272) ஆண்டுவந்தார். அவருக்குப் பிறகு அவரது புதல்வரான அசோகர் பட்டத்துக்கு வந்தார்.

அசோக மன்னர் புதிய நாடுகளை ஜயித்துத் தம் ராஜ்யத்தைப் பெரிதாகச் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணங்கொண்டார். ஆகையால் அவர் கி. மு. 261-ல் கலிங்க நாட்டின் மீது படையெடுத்தார்.

இந்த நாடு காவிரி நதிக்கும் மகா நதிக்கும் இடையில் கடற்கரையோரமாகப் பரவி இருந்தது. மூன்று வருஷ காலம் யுத்தம் நடந்தது. சண்டையில் ஆயிரக் கணக்கான கலிங்கர்கள் மடிந்தார்கள். இறந்துபோன வீரர்களையும் காயம் அடைந்தவர்களையும் கண்டு அசோகர் மனம் கலங்கினார். ஆகையால் அவர் தாம் இனிமேல் சண்டையே செய்வதில்லை என்று சபதம் செய்து கொண்டார். இவ்வாறு கலிங்க நாடு அசோக மன்னரால் ஜயித்துக் கொள்ளப்பட்டது. அதனால் அது மௌரிய ராஜ்யத்தில் அடங்கியுள்ள ஒரு மாகாணமாக ஆயிற்று.

இந்தப் போருக்குப் பிறகு அசோகர் புத்த மதத்தைத் தழுவினார். அவர் புத்த மதத்தைத் தழுவின பிறகு மாமிசம் சாப்பிடுவதையும் வேட்டையாடுவதையும் நிறுத்திவிட்டார். அவர் புத்த மதத்தைத் தமது ராஜ்யத்தில் பரவும்படியாகவும் செய்தார். மேலும், அவர் புத்த மதத்தின் கொள்கைகளை உபதேசம் செய்யும்படி அநேக புத்த சந்நியாசிகளை ஜப்பான், ஸிலோன், சீனா முதலான அந்நிய தேசங்களுக்கு அனுப்பினார்.

தம்முடைய குடிகள் புத்த மதத்தின் கொள்கைகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அவைகளைக் கற்பாறைகளிலும் ஸ்தம்பங்களிலும் பெரிய எழுத்துக்களில் பாலி என்ற பாஷையில் வெட்டுவித்தார். அசோக மன்னரால் நிற்க வைக்கப்பட்ட ஒரு கல் தூணின் உருவப் படத்தைப் பாருங்கள். கல் தூண்

களில், "பிள்ளைகள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்; உபாத்தியாயர்களிடம் அதிக மரியாதையுடன் இருக்க வேண்டும் ஜனங்கள் பிராணிகளிடம் அன்புடன் இருக்கவேண்டும்; எல்லோரும் உண்மையே பேச வேண்டும்; ஒவ்வொருவரும் தம் கடமையைத் தெரிந்துகொண்டு நடக்க வேண்டும்" என்று அவர் செதுக்கும்படிச் செய்தார்.



அசோகர் நாட்டிய ஒரு கல் தூண்

அசோகர் ஒரு பெரிய சக்கரவர்த்தி. அவரது ராஜ்யம் மிகப் பெரியது. அவருடைய ராஜ்யம் வடக்கே இமயமலை முதல் தெற்கே காவிரி நதி வரையில் பரவியிருந்தது. அவர் ராஜ்யத்தைத் தமது குடிகளின் நன்மைக்காக ஆண்டுவந்தார். அவர் நீர்ப்பாய்ச்சலுக்கு உதவும்படி அநேக வாய்க்கால்களையும் கிணறுகளையும் வெட்டும்படிச் செய்தார். அவர் பெரிய சாலைகளையும் போட்டு, அவற்றின் இரு பக்கங்களிலும் மரங்களை

வைத்துப் பயிராக்கினர். அவர் தமது ராஜ்யத்தில் கல்வியைப் பரவச் செய்ய அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். மேலும், அவர் நோயினல் வருந்தும் மனிதர்களுக்கும் தக்க வைத்தியம் செய்ய அநேகத் தர்ம வைத்தியசாலைகளைத் தமது ராஜ்யத்தில் பல இடங்களிலும் ஏற்படுத்தினர். இத்தகைய நல்ல செய்கைகளால் அவர் தம்முடைய குடிகளின் அன்பை அடைந்தார். இக் காரணங்களினல் இந்தியாவை ஆண்ட சக்கரவர்த்திகளில் அசோகர் மிகக் கீர்த்தி பெற்றவர் ஆவர்.

கேள்விகள்

1. அசோகர் எந்த நாட்டை ஜயித்துக் கொண்டார்?
2. அதன் பிறகு அவர் ஏன் வேறு நாடுகளை ஜயிக்க எண்ணம் கொள்ளவில்லை?
3. அசோகர் எந்த மதத்தைத் தழுவினர்?
4. அசோகர் தம் ராஜ்யத்தில் புத்த மதத்தை எப்படிப் பரவச் செய்தார்?
5. அசோகருடைய ஆட்சியில் குடி மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் யாவை?

11. அசோகருக்குப்பின் இந்தியாவின் நிலைமை

(கி. மு. 231-கி. பி. 300)

மௌரிய ராஜ்யத்தின் அழிவு:-அசோக சக்கரவர்த்திக்குப் பிறகு, மௌரிய அரசர்கள் கி. மு. 185 வரையில் ஆண்டு வந்தார்கள். அவர்களது காலத்தில் மௌரிய ராஜ்யம் க்ஷீணதசை அடையத் தொடங்கியது. கலிங்க நாடும், தக்காண பீடபூமியில் விளங்கின ஆந்திர நாடும் மௌரிய ராஜ்யத்தினின்று விலகிக் கொண்டன. மௌரிய ராஜ்யத்தில் அடங்கியிருந்த பஞ்சாப் மாகாணத்தையும், அதன் அருகிலுள்ள சில நாடுகளையும் கிரேக்கர்கள் ஜயித்துக்கொண்டார்கள். தவிர, மௌரிய ராஜ்யத்தின் சேனாதிபதியாயிருந்த புஷ்யமித்திரர் கடைசி மௌரிய சக்கரவர்த்தியைத் துரத்தி விட்டார். இக்காரணங்களால் மௌரிய ராஜ்யம் அழிந்தது.

சங்க வம்சத்தாரின் ஆளுகை (கி. மு. 186—72)

கி. மு. 186-ல் புஷ்யமித்திரர் என்னும் ஒரு சிறந்த தளகர்த்தர் மௌரிய வம்சத்துக் கடைசி அரசரைத் துரத்திவிட்டுத் தாமே மகதச் சிங்காதனம் ஏறினர். அவர் சங்க வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் முப்பத்தைந்து வருஷங்கள் (கி. மு. 185—150 வரை) ஆட்சி புரிந்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் மெனண்டர் என்ற கிரேக்கத் தலைவர் மகத ராஜ்யத்தின்மீது படை

எடுத்து வந்தார். புஷ்யமித்திரர் அவரை ஒரு சண்டையில் தோற்கடித்துத் துரத்தி விட்டார். புஷ்யமித்திரருக்குப் பிறகு சங்க வம்சத்தவர்கள் கி. மு. 72 வரையில் ஆண்டு வந்தார்கள்.

கண்வ வம்சத்தாரின் ஆளுகை (கி. மு. 72—27)

கி. மு 72-ல் கண்வ வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிராமணர் சங்க வம்சத்துக் கடைசி மன்னரைக் கொன்று விட்டுத் தாமே பட்டத்துக்கு வந்தார். கண்வ வம்சத்தின் கடைசி மன்னர் ஓர் ஆந்திர மன்னரால் கொல்லப் பட்டார். ஆகையால் அந்த வம்சத்தவர்களின் ஆட்சி கி. பி. 27-ல் அழிந்து விட்டது. அது முதல் மகத ராஜ்யம் ஆந்திரர்கள் ஆளுகையின் கீழ் இருந்திருக்கவேண்டும் என்று யூகிக்கப்படுகிறது.

சாக்கர்களும் குஷானர்களும் :— மெனாண்டர் என்ற கிரேக்கத் தலைவர் வடமேற்கு இந்தியாவில் பல நாடுகளை ஜயித்துக் கிரேக்கர்களின் ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். பிறகு **சாக்கர்கள்** என்ற ஒரு கூட்டத்தார் வடமேற்கு இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்கள் மங்கோலிய ஜாதியைச் சேர்ந்தவர்கள். சிந்து நதிப் பிரதேசங்களில் குடியேறிச் சில சிறிய நாடுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். நாளடைவில் அவர்கள் அரவல்லி மலைகளையடுத்த சில நாடுகளையும் ஜயித்துக் கொண்டார்கள். வட இந்தியாவின் மேற்குப் பாகத்தில் **சாக்கர்கள்** பலமடைந்திருந்தார்கள். சாக்கர்களுக்குப் பின், **குஷானர்கள்** என்னும் வேறொரு கூட்டத்தார்

இந்தியாவிற்கு வந்தார்கள்; சாக்கர்களைத் தோற்கடித்து அவர்களது நாடுகளில் சிலவற்றை ஜயித்துக்கொண்டார்கள். இவ்வாறு **குஷான் ராஜ்யம்** வடமேற்கிந்தியாவில் ஏற்பட்டது. **பெஷாவர்** (புருஷபுரம்) அதன் தலைநகரமாய் விளங்கிற்று.

கேள்விகள்

1. மௌரியம் ராஜ்யம் எக்காரணங்களால் அழிந்து போயிற்று?
2. புஷ்யமித்திரர் என்பவர் யார்? அவருடைய ஆளுகையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுதுக.
3. வட இந்தியாவின் மீது படையெடுத்து வந்த அன்னியர்கள் யாவர்?

---

12. குஷான் ராஜ்யம்

கனிஷ்கர் (கி. பி. 125 - 153) :-குஷான் ராஜ்யத்தை ஆண்டுவந்த மன்னர்களில் **கனிஷ்கர்** மிகச் சிறந்தவர். அவர் கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் குஷான் ராஜ்யத்தை ஆண்டு வந்தார். கனிஷ்கர் சாக்கர்களைத் தோற்கடித்து **சிந்து** மாகாணத்தை ஜயித்துக் கொண்டார். **காஷ்மீரம்** என்ற ராஜ்யத்தின் மீது படையெடுத்து அதையும் ஜயித்துக் கொண்டார். அவருடைய காலத்தில் குஷான் ராஜ்யம் வடஇந்தியாவின் மேற்குப் பாகத்தில் பரவியிருந்தது. அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள். அவரது காலத்தில் பொன் நாணயங்கள்

கேள்விகள்

1. கனிஷ்கர் வட இந்தியாவில் எந்தப் பாகத்தை அரசாண்டார்?
2. அவருடைய ராஜ்யத்தின் தலை நகரம் எது?
3. கனிஷ்கர் எந்த மதத்தைத் தழுவினர்? அந்த மதத்தை அவர் எப்படி ஆதரித்தார்?

---

13. சந்திர குப்தரும் சமுத்திர குப்தரும்

சந்திரகுப்தர் (கி. பி 320-326):—நாலாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் குப்த வம்சத்தார்கள் மகத ராஜ்யத்தில் அதிகாரம் பெற்றார்கள். அதன் பிறகு மகத ராஜ்யத்துக்குக் குப்த ராஜ்யம் என்ற பெயர் வழங்கிற்று. இந்த ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் சந்திரகுப்தர் என்பவர். அவர் பாடலிபுத்திரத்தைக்கைப்பற்றிக்கொண்டதோடு, அதைச் சுற்றியுள்ள நாடுகளையும் ஜயித்துக்கொண்டார். அவர் லிச்சாவி குலத்தைச் சேர்ந்த குமாரதேவியை மணம் புரிந்து கொண்டார். அவர் ஆறு வருஷ காலம் குப்த ராஜ்யத்தில் ஆட்சி புரிந்தார்.

சமுத்திர குப்தர் (கி. பி. 326-375):—சந்திரகுப்தருக்குப் பின், அவரது புதல்வரான சமுத்திர குப்தர் கி. பி. 326-ல் சிங்காதனம் ஏறினர். அவர் வட இந்தியாவில் ஆண்டு வந்த அநேக மன்னர்களைத் தோற்கடித்து அவர்களது நாடுகளை ஜயித்துத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். பிறகு, அவர் ஒரு

வழங்கி வந்தன. அவை புருஷ புரத்துக்குச் சமீபத்தில் புதைந்து கிடந்து அகப்பட்டிருக்கின்றன. அவரது ஆட்சிக் காலத்தில் புருஷபுரம் குஷான் ராஜ்யத்தின் தலைநகரமாக இருந்தது.

கனிஷ்கர் புத்தமதத்தில் அதிகஅபிமானமுள்ளவர். அவர் புத்தருடைய ஞாபகார்த்தமாக 400 அடி உயரமுள்ள ஒரு கோபுரத்தையும், ஒரு சன்னியாசி மடத்தையும் புருஷபுரத்தில் கட்டிவைத்தார். அவர் தாம் புத்தமதத்தைத் தழுவினதோடு, பௌத்தத் துறவிகளைக் கொண்டு அதன் கொள்கைகளை ஜனங்களுக்குப்போதிக்கும்படியும் செய்தார். புத்தத் துறவிகளுக்காக மடங்களைக் கட்டுவித்தார். கி. பி. 140-ல் அவர் 500 புத்த சந்நியாசிகளைத் தருவித்து ஒரு பெரிய மதச் சபையைக் கூட்டினர். கனிஷ்கரால் கட்டப்பட்ட ஸ்தூபிகளை நாம் காந்தார ராஜ்யத்தில் இன்றைக்கும் காணலாம். கனிஷ்கரது ஆளுகை குஷான் ராஜ்யத்தில் கி. பி. 153-ல் முடிவடைந்தது.

கனிஷ்கருக்குப் பின்:—குஷான் வம்சத்தவர்கள் கி. பி. 256 வரையில் வட இந்தியாவின் மேற்குப் பாகத்தில் ஆட்சி புரிந்துவந்தார்கள். அவர்களில் **வாசுதேவர்** ஒருவர். அக்காலத்தில் மகத ராஜ்யமும், ஆந்திர ராஜ்யமும் க்ஷீணதசை அடைந்து விட்டன. வட இந்தியாவில் அநேக சிறிய நாடுகள் தோன்றின. கி. பி. 320 வரையில் வலிமையுள்ள அரசாங்கம் ஒன்றும் ஏற்படவில்லை.

பெரிய சேனையுடன் தக்காணத்தின் மீது படையெடுத்து வந்தார். அவர் பாடலிபுத்திரத்திலிருந்து புறப்பட்டுக் கிழக்குக் கடற்கரை ஓரமாய்ச் சென்று வெங்கிபுரத்தை அடைந்தார். பல்லவ மன்னரான விஷ்ணுகோபன் என்னும் மன்னரைத் தோற்கடித்து பல்லவ ராஜதானியாகிய காஞ்சீபுரம் நகரைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு, அவர் பாலக்காடு வரையில் தெற்கே சென்றார். அவர் பாடலிபுத்திரத்திற்குத் திரும்பிச் சென்றார். தக்காணத்தில் ஆண்டு வந்த பல மன்னர்களும் அவருக்குக் கீழ்ப் படிந்தார்கள். இந்தத் தென்னிந்தியப் படையெழுச்சியால் சமுத்திர குப்தருக்குப் பெரும் கியாதி உண்டாயிற்று.

அவர் பாடலிபுத்திரத்துக்குத் திரும்பின பிறகு தம் வெற்றிகளின் ஞாபகார்த்தமாய் ஓர் அசுவமேத யாகத்தைச் செய்தார். மேலும், அவர் அலஹாபாத்தில் அசோகரால் நிறுத்திவைக்கப்பட்ட ஒரு கற்தூணில் தம் பராக்கிரமச் செயல்களைச் சமஸ்கிருத பாஷையில் வெட்டுவிக்கும்படிச் செய்தார். அவர் தமது ராஜ்யத்தைப் பெரும் புகழுடன் ஆண்டு விட்டு கி. பி. 375-ல் மரணமடைந்தார்.

கேள்விகள்

1. குப்த ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. இரண்டாவது குப்த மன்னர் யார்? அவர் செய்த அரிய செயல் யாது?
3. அவர் தென்னிந்தியாவில் எங்கெந்த ஊர்களுக்குச் சென்றார்?

14. சந்திரகுப்தர் II

(கி. பி. 375—கி. பி. 413)

சமுத்திரகுப்தருக்குப் பின், அவருடைய மைந்தரான சந்திரகுப்தர் குப்த ராஜ்யத்தில் சிங்காதனமேறினார். அவர் தம் தந்தையைப்போல அதிகப் பராக்கிரமம் உள்ளவர்; நாட்டை ஆளும் திறமை வாய்ந்தவர். அவர் தம் தந்தையைப்போல் புதிய நாடுகளை ஜயித்துக் குப்த ராஜ்யத்தைப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம் உள்ளவராயிருந்தார். ஆகையால், அவர் சாக்கர் குல மன்னர்களைப் போரில் தோற்கடித்து, மாளவம், கூர்ஜ்ஜரம், சுராஷ்டிரம், முதலிய மாகாணங்களை ஜயித்துக்கொண்டார். அவர் பல பராக்கிரமச் செயல்களை முடித்ததனால், அவருக்கு விக்கிரமாதித்தியர் என்ற பெயர் வழங்கிவந்தது. சந்திரகுப்தர் சாக்கர்களைப் பல சண்டைகளில் தோற்கடித்து அவர்களுடைய நாடுகளை ஜயித்துக் கொண்டதனால், அவருக்குச் சாக்காரி என்ற வேறொரு பெயரும் உண்டு. அவர் சாக்கர்களின் மீது அடைந்த வெற்றிகளினால் அவருடைய புகழ் எங்கும் பரவியது. அவரைப்பற்றிப் பலர் அநேக கதைகளையும் கற்பனை செய்து, அவருடைய கீர்த்தியைப் பரவச் செய்தார்கள். சந்திரகுப்தர் மாளவ நாட்டை ஜயித்த பிறகு, அதன் தலைநகரமாய் விளங்கின உஜ்ஜயினியைத் தம் ராஜ்யத்திற்கும் தலைநகரமாகச் செய்துகொண்டார். அவரது காலத்தில் குப்த ராஜ்யத்தின் விஸ்தீரணத்தைக் காட்டும் இந்தியாப் படத்தைப் பாருங்கள்.

இந்து மதம் ஆதரவடைதல்; பா ஹியான் :— சந்திரகுப்தருக்கு இந்து மதத்தில் அபிமானம் அதிகம். அவர்



அநேக இந்துக் கோவில்களைக் கட்டும்படிச் செய்து, அவைகளில் உற்சவங்கள் வெகு விமரிசையாய்

நடக்கும்படிச் செய்தார். குப்த மன்னர்களின் காலத்தில் புத்தமதமும் அதிக ஆதரவைப் பெற்றது. இரண்டாவது சந்திரகுப்தரின் ஆட்சிக் காலத்தில் சீனதேசத்திலிருந்து ஒரு புத்த சந்நியாசி இந்தியாவிற்கு வந்தார். அவரது பெயர் பா ஹியான். அவர் புத்தமத நூல்களைச் சேகரிப்பதற்கும், புத்தர்களின் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கும் வட இந்தியாவிற்கு வந்தார்.

அவர் ப்ாடலிபுத்திரத்தில் உள்ள ஒரு மடத்தில் தங்கியிருந்து புத்த நூல்களைப் படித்தார். அவர் சிந்து நதித் தீரம் முதல் வங்காளம் வரையில் பிரயாணம் செய்து, தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பற்றி சீன பாஷையில் ஒரு புத்தகம் எழுதினர். அந்த வரலாற்றிலிருந்து சந்திரகுப்தர் தமது ராஜ்யத்தை வெகு நன்ருக ஆண்டு வந்தார் என்பது நமக்குத் தெரிய வருகிறது.

கல்வி ஆதரிக்கப்படுதல் :—விக்கிரமாதித்தியர் அநேக சமஸ்கிருத வித்துவான்களை ஆதரித்து வந்தார். அவர்களுள் மிகக் கியாதி பெற்றவர் **காளிதாஸர்**. அதே காலத்தில் வைத்திய சாஸ்திரத்தில் நிபுணரான **தன்வந்திரி**யும், வான சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற **வராகமிஹிரர்** என்பவரும், அகராதி எழுதிய **அமரசிங்கர்** என்பவரும் இருந்தார்கள். தவிர, சந்திரகுப்தர் அநேக சங்கீத வித்துவான்களையும், சித்திரம் எழுதுபவர்களையும் பொருள் உதவி செய்து ஆதரித்து வந்தார். இத்தகைய நற்காரியங்கள் அவருடைய கியாதியைப் பரவச் செய்தன. விக்கிரமாதித்தியர் குப்த ராஜ்யத்தை மிகச்

சிறப்புடன் ஆண்டுவிட்டுக் கி. பி. 413-ல் காலஞ் சென்றார்.

குப்த ராஜ்யத்தின் அழிவு :— விக்கிரமாதித்தியருக்குப் பின், அவருடைய புதல்வரான **குமார குப்தர்**, பேரப் பிள்ளையான **ஸ்கந்த குப்தர்** என்ற இருவரும் கி. பி. 480



குப்த நாணயங்கள்

வரையில் ஆண்டு வந்தார்கள். ஸ்கந்தகுப்தரின் ஆட்சிக் காலத்தில் மங்கோலிய ஜாதியைச் சேர்ந்த ஹூணர்கள் சிந்து நதிப் பிரதேசம் முழுவதையும் ஜயித்துக் கொண்டார்கள்; பிறகு குப்த ராஜ்யத்தின் மீதும் படையெடுத்தார்கள். ஆகையால் குப்த ராஜ்யம் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டின் இறுதியில் நசித்துப் போயிற்று.

தோரமாணுவும் மிஹிரகுலாவும்:-இதன் பிறகு ஹூணர் களின் தலைவரான **தோரமாணு** பஞ்சாப், ராஜபுதனம் மத்திய இந்தியா இவைகளைச் சேர்த்து ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தி ஆண்டு வந்தார். அவருக்குப் பின், அவ ருடைய மகன் **மிஹிரகுலா** சுமார் முப்பது வருஷகாலம்

தன் ராஜ்யத்தை ஆண்டு வந்தான். அவன் தன் குடிகளை வெகு கொடூரமாய் நடத்தினன். அவன் புத்த மடங்களையும், ஸ்தூபிகளையும் இடித்து விடும்படிச் செய்தான். அக்காலத்தில் வட இந்தியாவில் பலம் பெற்றிருந்த மன்னர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, பெரிய படைகளுடன் அவன்மீது போர் தொடுத்தார்கள். கரார் என்ற இடத்தில் ஒரு சண்டை நடந்தது. அதில் மிஹிரகுலா தோல்வியடைந்து காஷ்மீர தேசத்திற்கு ஓடிவிட்டான். இவ்வாறு ஹூணர்களின் ராஜ்யம் வட இந்தியாவில் அழிந்து போயிற்று.

கேள்விகள்

1. சந்திர குப்தர் எந்த நாடுகளை ஜயித்துக் கொண்டார்?
2. அவருக்கு ஏன் விக்கிரமாதித்தியர் என்ற பெயர் வந்தது?
3. அவரது காலத்தில் சிறப்புற்று விளங்கின சமஸ்கிருதக் கவி யார்? அவர் எழுதிய ஒரு நாடகக் காவியத்தைச் சொல்லு.
4. குப்த ராஜ்யம் எக்காரணங்களால் அழிந்து போயிற்று?
5. மிஹிரகுலா எப்படித் தோற்கடிக்கப்பட்டார்?

15. ஹர்ஷ வர்த்தனர்

(கி. பி. 605—647)

பிரபாகர வர்த்தனர் :—முன் பாடத்தில் வட இந்தியாவிலுள்ள அநேக மன்னர்கள் ஒன்று சேர்ந்து ஹூணர்களைப் போரில் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள் என்று வாசித்தீர்கள் அல்லவா? அவர்களில் குப்த வம்சத்தைச் சேர்ந்த **நரசிம்ம குப்தரும்**, தனேச்வரம் என்ற ஒரு சிறிய நாட்டை ஆண்டுவந்த **பிரபாகர வர்த்தனரும்** முக்கியமானவர்கள். ஹூணர்களின் ராஜ்யம் அழிந்த பிறகு, பிரபாகர வர்த்தனர் தம் சிறிய நாட்டைச் சுற்றியுள்ள நாடுகளையெல்லாம் ஜயித்து, வட இந்தியாவில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினார். அதை அவர் கொஞ்சகாலம் ஆட்சி புரிந்துவிட்டு கி. பி. 605-ல் மரணமடைந்தார்.

ஹர்ஷர்:-பிரபாகர வர்த்தனருக்குப் பிறகு, அவரது மூத்த மைந்தர் பட்டத்துக்கு வந்தார். அவர் இறந்த பின், அவருடைய இளைய சகோதரரான **ஹர்ஷ வர்த்தனர்** சிங்காதனமேறினார். அப்பொழுது

பிரபாகர வர்த்தனர்

ராஜ்ய வர்த்தனர் | ஹர்ஷ வர்த்தனர் | ராஜ்யஸ்ரீ

அவருக்கு வயது பதினாறு. அவர் சிங்காதனம் ஏறின பிறகு அவர் தம் சகோதரியின் கணவரைக் கொன்ற

மாளவ மன்னருடன் போர் செய்தார். அதில் அவரைத் தோற்கடித்துக் கொன்றார்.



ஹர்ஷர் மிகப் பராக்கிரமசாலி; நீதிமான். அவருக்குக் கல்வியில் அபிமானம் அதிகம். ஆகையால்

அவர் அறிவுடைய பெரியோர்களை அன்புடன் ஆதரித்து வந்தார். அவர்களுள் **பாணர்** என்பவர் ஒருவர். அவர் ஹர்ஷருடைய சரித்திரத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதற்கு 'ஹர்ஷ சரிதம்' என்பது பெயர். அந்தப் புத்தகத்தை வாசித்தால் நாம் ஹர்ஷ சக்கரவர்த்தியின் குணதிசயங்களைப் பற்றியும், அவரது ஆட்சி முறையைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம்.

ஹர்ஷரது ராஜ்யம்:—ஹர்ஷர் பட்டத்துக்கு வரும் பொழுது, அவருடைய ராஜ்யம் தனேச்வரம் என்ற பட்டணத்தைச் சுற்றி மட்டும் வியாபித்திருந்தது. அவர் வட இந்தியாவிலுள்ள அநேக மாகாணங்களை ஜயித்துத் தமது ராஜ்யத்தைப் பெரிதாக்கிக் கொண்டார். அவர் நர்மதை நதிக்குத் தெற்கேயுள்ள **சாளுக்கிய** ராஜ்யத்தை ஜயிக்க எண்ணினர். ஆகையால், அவர் ஒரு சேனையுடன் நர்மதை நதிக் கரைக்கு வந்தார். அப்பொழுது சாளுக்கிய ராஜ்யத்தை **புலிகேசி II** என்ற ஒரு மன்னர் ஆண்டு வந்தார். அவர் ஹர்ஷரைப் போல் ஒரு பெரிய வீரர். **நர்மதை நதிக் கரையில்** இந்த இரண்டு மன்னர்களுக்கும் ஒரு சண்டை நடந்தது. அதில் ஹர்ஷர் தோல்வியடைந்து வட இந்தியாவிற்குத் திரும்பி விட்டார். ஆகையால் ஹர்ஷர் தக்காணத்தை ஜயிப்பதற்குச் செய்த முயற்சிகள் வீணாயின.

ஹர்ஷர் தமது ராஜ்யத்தை வெகுச் சிறப்புடன் நாற்பத்திரண்டு வருஷங்கள் ஆண்டுவந்தார். **கன்னோசி** அவரது ராஜ்யத்தின் முக்கியப் பட்டணமாய் இருந்தது.

ஹர்ஷரும் புத்த மதமும் :—ஹர்ஷ மன்னர் புத்த மதத்தில் அதிகப் பற்றுள்ளவர். அவர் இந்துக்களையும் புத்த மதத்தைத் தழுவினவர்களையும் வித்தியாசம் பாராட்டாமல் நடத்திவந்தார். அசோக மன்னரைப் போலவே மிருகங்களைக் கொல்லக்கூடாது என்று கட்டளையிட்டார்; அநேக சத்திரங்களையும், தர்ம வைத்திய சாலைகளையும் ஏற்படுத்தினர். அநேக கோயில் களையும் மடங்களையும் கட்டுவித்தார். இப்படி அவர் தமது ராஜ்யத்தைப் பெரும்புகழுடன் ஆண்டு விட்டு கி. பி. 648-ல் இறந்து போனர்.

ஹியூவன் சியாங்:— ஹர்ஷருடைய ஆளுகையைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு வேறொரு ஆதார நூல் இருக்கிறது: அது ஹியூவன் சியாங் என்ற சீன தேசத்து யாத்திரி ஒருவரால் எழுதப்பட்டது. அவர் புத்தர் பிறந்து வளர்ந்த இடங்களைத் தரிசிப்பதற்கும், புத்த மத நூல்களைச் சேகரிப்பதற்கும் இந்தியாவிற்கு வந்தார். அவர் பதினைந்து வருஷங்கள் நமது நாட்டிலே தங்கி யிருந்தார். அவர் ஹர்ஷரால் கன்னோசியில் கூட்டப் பட்ட ஒரு புத்த சபைக்கு அழைக்கப்பட்டு வந்தார். அவர் அச்சபையில் புத்த மதத்தின் பெருமையை யாவரும் புகழும்படி எடுத்துக் காட்டினர். பல இடங்களில் புத்த மதம் க்ஷீணித்துக்கொண்டு வருவதையும், ஜனங் களுக்கு அம்மதத்தில் அபிமானம் குறைந்து வருவதை யும் கண்டார். அவர் தெற்கே காஞ்சீபுரத்திற்குச் சென்று மூன்று வருஷங்கள் அங்கே தங்கியிருந்தார்; தென்னிந்தியாவில் புத்த மதத்தின் நிலைமையை அறிந்து

கொண்டார். அந்தச் சீன யாத்திரி அநேக புத்த மத நூல்களைச் சேகரித்துக் கொண்டார்; புத்த விக்கிரகங்களையும் வாங்கிக் கொண்டார். அவர் கி. பி. 645-ல் சீன தேசத்துக்குப் பல மத நூல்களுடனும் புத்த விக்கிரகங்களுடனும் திரும்பிச் சென்றார். அவர் திரும்பிச் சென்று இரண்டு வருஷங்களுக்குப் பிறகு (கி. பி. 647-ல்) ஹர்ஷ சக்கரவர்த்தி மரணமடைந்தார்.

கேள்விகள்

1. ஹர்ஷர் புலிகேசியுடன் எங்கே சண்டை செய்தார்? எதற்காக?
2. ஹர்ஷருக்கு எந்த மதத்தில் அபிமானம் அதிகம்? அவர் அந்த மதத்தை எப்படி ஆதரித்தார்?
3. ஹர்ஷர் காலத்தில் வட இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரி யார்? அவர் எதற்காக வந்தார்?
4. ஹர்ஷரை அசோகருக்கு எவ்விதங்களில் ஒப்பிடலாம்?

16. ராஜபுத்திரர்கள்

வட இந்தியாவில் சிந்து நதிக்கும், யமுனை நதிக்கும் இடையிலுள்ள பாலைவனப் பிரதேசத்துக்கு ராஜபுதனம் என்பது பெயர். அங்கே வசித்து வருகின்றவர்களுக்கு ராஜபுத்திரர்கள் என்று பெயர். அவர்கள், ஹர்ஷருடைய மரணத்துக்குப் பிறகு, வட இந்தியாவில் பலாட்டியர் களானார்கள்.

ராஜபுத்திரர்கள் யார்? :—வெகு காலமாய்ப் போர்த் தொழில் செய்து வந்த க்ஷத்திரியர்கள், அரவல்லி மலை களுக்கு அருகிலுள்ள நாடுகளில் வசித்து வந்தார்கள். பிறகு கிரேக்கர்களும், சாக்கியர்களும், பார்த்தியர் களும், ஹூணர்களும் வட இந்தியாவின் மீது படை யெடுத்து சிந்துநதிப் பிரதேசத்திலும், அரவல்லி மலை களுக்குச் சமீபத்திலுள்ள நாடுகளிலும் வந்து தங்கினார் கள். காலம் செல்லச் செல்ல, அவர்கள் அங்கு வசித்து வந்த ஜனங்களுடன் நெருங்கிப் பழகியதோடு கூட விவாகச் சம்பந்தங்களால் அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அவர்கள் தங்களை ராஜபுத்திரர்கள் என்றும், தாங்கள் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் இந்து மதத்தைத் தழுவினார்கள். அவர்களுக்குள் ஜாதிக் கட்டுப்பாடு அதிகம். அவர்களுள் சிலர், தாங்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இன்னும் சிலர் தாங்கள் அக்னி குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லி வருகின்றனர்.

ராஜபுத்திரர்களின் குணாதிசயங்கள் :— ராஜபுத்திரர்கள் மிகத் தைரியசாலிகள். அவர்களுக்குக் குதிரைச் சவாரி செய்யத் தெரியும். அவர்கள் வெகு திறமையுடன் போர் செய்வார்கள். போர்க்களத்தில் அவர்கள் தோல்வி யடைந்த போதிலும், அங்கேயே போர் செய்து இறப் பார்களே தவிர, தங்களுடைய விரோதிகளுக்குப் பயந்து புறங்காட்டி ஓடுவதில்லை. தங்களுடைய மதத்தையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்ளும் விஷயத் தில் தங்களுடைய உயிரைக்கூட அவர்கள் பெரிதாக நினைப்பதில்லை. ராஜபுத்திர வீரர்கள் தங்களுடைய ஸ்திரீகளை வெகு கண்ணியத்துடன் நடத்தினார்கள். ராஜபுத்திர ஸ்திரீகளும் தங்களது கணவர்களிடம் அதிக விசுவாசத்துடன் இருந்து வந்தார்கள். ராஜ புத்திரர்கள் உயிரை விட மானமே பெரிது என்று நினைத்தார்கள்.

இத்தகைய நற்குணங்கள் அவர்களிடம் இருந்த போதிலும், அவர்களுக்குள் ஒற்றுமை சிறிதேனும் கிடையாது. போர் புரிவது க்ஷத்திரியர்களுக்கு அழகு என்று நினைத்து, ராஜபுத்திர வீரர்கள் அடிக்கடி போர் புரிந்து வந்தார்கள். அதனால் அவர்கள் பலமற்றவர் களானார்கள். அவர்கள் கி. பி. 11-வது நூற்றாண்டில் வட இந்தியாவின் மீது படையெடுத்து வந்த முகம்மதியர் களுக்குக் கீழ்ப்படியும்படி ஏற்பட்டது.

ராஜபுத்திர ராஜ்யங்கள் :— ராஜபுத்திரர்கள் சிந்து நதி முதல் பீஹார் மாகாணம் வரையில் உள்ள அநேக

ராஜ்யங்களை வட இந்தியாவில் ஏற்படுத்தி ஆண்டு வந்தார்கள். அவைகளில் டில்லி, ஆஜ்மீர், கன்னேசி, மாளவம், கூர்ஜ்ஜரம் முக்கியமானவைஆகும். ராஜபுத்திர மன்னர்கள் அதிகப் பொருமையாலும் விரோதத் தாலும் அடிக்கடி சண்டையிட்டு வந்த போதிலும், அவர்களது ஆட்சி கி. பி. 700 முதல் சுமார் நான்கு நூற்றுண்டுகள் வரையில் வட இந்தியாவில் நீடித்திருந் தது. ஆகையால் இக்காலப் பிரிவை (கி. பி. 700-1100) ராஜபுத்திரர்கள் ஆட்சிக்காலம் என்று அழைக்கலாம்.

கேள்விகள்

1. ராஜபுத்திரர்கள் வட இந்தியாவில் ஏற்படுத்திய முக்கிய ராஜ்யங்கள் யாவை?
2. ராஜபுத்திரர்களின் சிறந்த குணாதிசயங்கள் யாவை?
3. ராஜபுத்திரர்கள் கி. பி. 11-வது நூற்றுண்டில் ஏன் தங்கள் வலிமையையும் செல்வாக்கையும் இழந்தார்கள்?
4. வட இந்தியாப் படம் வரைந்து, அதில் ராஜபுத்திர ராஜ்யங்களைக் குறிப்பிடுக.

கால அட்டவணை

வருஷங்கள்		முக்கிய நிகழ்ச்சிகள்
கி. மு.	650– 371	சிசுநாக வம்சத்தாரின் ஆளுகை
,,	371– 321	நந்த அரசர்கள் மகத ராஜ்யத்தில் ஆளுதல்
,,	327	அலெக்ஸாண்டரின் படையெழுச்சி
,,	326	ஜீலம் நதிச் சண்டை
,,	321	மௌரிய ராஜ்ய ஸ்தாபனம்
,,	272– 232	அசோகச் சக்கரவர்த்தியின் ஆளுகை
,,	261	கலிங்கப்போர்
,,	185– 72	சங்க வம்சத்தாரது ஆளுகை
,,	185– 150	புஷ்பமித்திரரின் அரசாட்சி
,,	72– 27	கண்வ வம்சத்தாரது ஆளுகை
கி. பி.	125– 153	கனிஷ்கரது ஆளுகை
,,	320	குப்த சாம்ராஜ்ய ஸ்தாபனம்
,,	326– 375	சமுத்திர குப்தரின் ஆளுகை
,,	375– 413	இரண்டாவது சந்திரகுப்தரின் ஆளுகை
,,	399– 415	பாஹியானின் இந்தியச் சுற்றுப் பிரயாணம்
,,	530	மிஹிரகுலா காரார் சண்டையில் தோல்வி அடைதல்
,,	606– 647	ஹர்ஷ வர்த்தனர்
,,	609– 642	2-வது புலிகேசி
,,	700–1050	ராஜபுத்திரர்களின் மேன்மைக் காலம்

17. தக்காணச் சரித்திரம்

இந்தியாவில் விந்திய மலைக்குத் தெற்கே பரவி யுள்ள மேட்டுப் பாகத்துக்குத் தக்காணம் என்பது பெயர். அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் தக்காணம் மௌரிய ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது.

ஆந்திரர்கள்:-கோதாவரி நதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடையிலே கடற்கரையடுத்த நாட்டில் ஆந்திரர்கள் என்ற ஒரு கூட்டத்தார் முதல் முதலில் வசித்தார்கள். அவர்கள் அங்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டு அதை ஆண்டு வந்தார்கள். ஸ்ரீகாகுளம் (தற்காலத்திய ஷிகாகோல்) ஆந்திர ராஜ்யத்தின் முதல் தலைநகரமாக விளங்கிற்று. ஆந்திர மன்னர்களுக்குச் சாதவாஹனர்கள் என்பது பெயர். முப்பது ஆந்திர அரசர்கள் சுமார் 450-வருஷங்கள் தக்காணத்தில் ஆண்டு வந்ததாகத் தெரிய வருகிறது. ஆந்திர ராஜ்யம் தக்காணத்தின் பெரும் பாகத்தில் பரவியிருந்தது. ஆந்திர நாட்டில் புத்த மதம் ஜனங்களால் தழுவப்பட்டு வந்தது. ஆந்திர மன்னர்கள் புத்த மதத்தை அபிமானித்து வந்தார்கள். கி. பி. 225-ல் ஆந்திர ராஜ்யம் அழிந்து விட்டது.

சாளுக்கியர்கள்:—ஆந்திர ராஜ்யம் அழிந்துபோன பின், கி. பி. ஆறாவது நூற்றாண்டின் மத்தியில் தக்காணத்தில் சாளுக்கியர் என்னும் ஒரு ஜாதியார் பல மடைந்து ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். சாளுக்கிய

ராஜ்யத்துக்கு பாதாமி (வாதாபி) தலைநகரமாயிருந்தது அவர்கள் பல்லவர்களுடன் போர் புரிந்து துரத்தி விட்டார்கள். அதை ஆண்டுவந்த மன்னர்களில் இரண்டாவது புலிகேசி மிகக் கியாதி பெற்றவர். அவர் ஹர்ஷ சக்கரவர்த்தியை நருமதை நதிக் கரையில் நடந்த சண்டையில் தோற்கடித்துத் துரத்தினர் என்று நீங்கள் ஏற்கனவே படித்திருக்கிறீர்கள். அவருடைய ராஜ்யம் நருமதை முதல் பாலாறு வரையிலும், அரபிக் கடல் முதல் வங்காள விரிகுடா வரையிலும் வியாபித்து இருந்தது. அவருடைய ஆட்சிக்காலத்தில் ஹியூவன் சியாங் சாளுக்கிய ராஜ்யத்துக்கு வந்தார். இந்தச் சாளுக்கிய மன்னர் தம் ராஜ்யத்துக்குத் தெற்கே பலமடைந்திருந்த பல்லவர்களுடன் அடிக்கடி சண்டையிட்டு வந்தார். ஒரு சண்டையில் பல்லவர்கள் இந்த சாளுக்கிய மன்னரைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டார்கள். ஆயினும், சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நேரிட்டு வந்தன.

ராஷ்டிரகூடர்கள்:—எட்டாவது நூற்றுண்டின் மத்தியில் தக்காணத்தில் **ராஷ்டிரகூடர்கள்** என்ற ஒரு கூட்டத்தார் பலமடைந்தனர். அவர்கள் சாளுக்கிய மன்னரைக் கொன்று விட்டுத் தக்காணத்தில் ஆளத் தொடங்கினர்கள். ராஷ்டிரகூட மன்னர்கள் சுமார் 220 வருஷ காலம் (கி. பி. 750-973) தக்காண பீடபூமியில் ஆட்சி புரிந்து வந்தார்கள். அவர்களில் முதலாவது கிருஷ்ணன் மிகக் கியாதி பெற்றவர். அவர் எல்லோரா என்னுமிடத்தில் கைலாசநாதர் கோவிலைக்

கட்டுவித்தார். இந்தக் கோவில் பாறைகளைக் குடைந்து கட்டப்பட்டதாகும். வேறொரு ராஷ்டிரகூட மன்னர்



எல்லோராவிலுள்ள கோவில்

தெற்கில் காவிரி நதித் தீரத்திலுள்ள நாடுகளை ஜயித்துத் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இந்த

வம்சத்து மன்னர்கள் ஜயின மதத்தை அபிமானித்து வந்தார்கள்.

பழைய சாளுக்கிய வம்சம்:— கி. பி. 973-ல் ராஷ்டிர கூட மன்னர்களின் ஆளுகை முடிவடைந்தது. பழைய சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த தைலப்பா கடைசி ராஷ்டிரகூட மன்னரைச் சிம்மாசனத்தினின்று நீக்கி விட்டுத் தாமே ஆண்டு வரத் தொடங்கினர். இந்த வம்சம் 'இரண்டாவது சாளுக்கிய வம்சம்' என்று அழைக்கப் படுகிறது. இந்த வம்சத்து அரசர்களின் காலத்தில் கல்யாண் என்ற பட்டணம் சாளுக்கிய ராஜ்யத்தின் தலை நகரமாக இருந்து வந்தது. கி. பி. 12-வது நூற்றாண்டின் கடைசியில் சாளுக்கியரின் வலிமை தக்காணத்தில் அழிந்து விட்டடது.

கேள்விகள்

1. சாளுக்கிய ராஜ்யத்தின் தலை நகரம் எது?
2. இரண்டாவது புலிகேசி யார் யாருடன் போர் புரிந்தார்? எதற்காக?
3. ராஷ்டிரகூட மன்னர்களில் முக்கியமானவர் யார்? அவர் செய்த முக்கிய வேலை யாது?

---

18. பல்லவர்கள்

(கி. பி. 200—1100)

ஆந்திரர்களுக்குப்பின், தென் தக்காணத்திலும் தென்னிந்தியாவின் வட பாகத்திலும் பல்லவர்கள் என்ற ஒரு கூட்டத்தார் பலமடைந்து அரசு புரிந்தார்கள். அவர்கள் தமிழ் நாட்டினர்களே என்று நம்புவதற்கான ஆதாரங்கள் தமிழ் நூல்களில் இருக்கின்றன. காஞ்சீபுரம் பல்லவ ராஜ்யத்துக்குத் தலைநகரமாகப் பல வருஷங்கள் இருந்துவந்தது. சமுத்திரகுப்தர்கி. பி.340-ல் தென்னிந்தியாவின் மீது படையெடுத்து வருகையில், காஞ்சீபுரத்தில் விஷ்ணுகோபன் என்ற ஒரு பல்லவ மன்னர் ஆட்சி புரிந்தார். அவர் ஒரு சண்டையில் தோல்வியடைந்ததால், குப்த மன்னருக்குக் கீழ்ப்படிந்தார். பல்லவ மன்னர்களுள் மகேந்திர வர்மனும், அவரது புதல்வரான நரசிம்ம வர்மனும் மிகக் கியாதிபெற்றவர்கள். மஹாபலிபுரம் குகைக் கோவில்கள் நரசிம்ம வர்மனின் காலத்தில் கட்டப்பட்டன. அவரது காலத்தில்தான் ஹியூவன் சியாங் என்ற சீன யாத்திரி காஞ்சீபுரத்துக்கு விஜயம் செய்தார்.

பல்லவர்கள் நீர்ப்பாசனத்துக்காகப் பெரிய ஏரிகளையும், வாய்க்கால்களையும் வெட்டுவித்தார்கள். சோழ மன்னர்களைப் போல், சிற்ப வேலைகள் நிறைந்த கோவில்களைக் கட்டினார்கள். அவர்கள் மிகவும் நாகரிகம் வாய்ந்தவர்கள் என்பது அவர்களது செயல்களால் நன்கு தெரிய வருகிறது



மஹாபலிபுரம் கோவில்கள்

எட்டாவது நூற்றூண்டின் மத்தியில் பல்லவர்களின் வலிமையும் செல்வாக்கும் பல காரணங்களால் அழிந்து விட்டன. வடக்கே சாளுக்கியர்களோடும் தெற்கில் சோழ மன்னர்களோடும் பல்லவர்கள் அடிக்கடி சண்டை செய்ய நேரிட்டதால் அவர்களது வலிமை குன்றியது. கி. பி. 9-வது நூற்றூண்டின் இறுதியில் சோழ மன்னர்கள் தென்னிந்தியாவில் பல மடைந்ததும், பல்லவத் தலைவர்கள் அவர்களது அதிகாரத்துக்குட்பட்டுப் பல சிறிய நாடுகளை ஆண்டு வரலாயினர்.

கேள்விகள்

1. பல்லவ ராஜ்யத்தின் தலை நகரம் எது ?
2. பல்லவ மன்னர்களுள் இரண்டு பேரைச் சொல்லுக.
3. மஹாபலிபுரத்தில் உள்ள கோவில்கள் யார் காலத்தில் கட்டப்பட்டன ?
4. பல்லவர்கள் குடிமக்களுக்கு என்ன நன்மைகளைச் செய்தார்கள் ?

---

19. தென்னிந்தியச் சரித்திரம்

திராவிடர்கள்:—கிருஷ்ணா நதி முதல் தெற்கில் கன்னியாகுமரி வரையிலுள்ள நாட்டிற்கு தென்னிந்தியா என்பது பெயர். இந்த நாட்டில் ஆதிகாலம் முதல்



தென் இந்தியா

திராவிடர்கள் என்ற ஒரு ஜாதியார் வசித்து வந்தார்கள். அவர்கள் தமிழ்ப் பாஷையைப் பேசி வந்ததன் காரணத்தால் இதற்குத் 'தமிழகம்' என்ற பெயரும் உண்டு.

அவர்கள் அதிக நாகரிக முள்ளவர்கள். அவர்கள் அயல் நாட்டார்களுடன் சமுத்திர மார்க்கமாய் வியாபாரம் செய்து வந்ததாகவும் தெரியவருகிறது. அவர்கள் தென்னிந்தியாவில் சேர ராஜ்யம், சோழ ராஜ்யம், பாண்டிய ராஜ்யம் என்ற மூன்று ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள்.

I. சேர ராஜ்யம்

தென்னிந்தியாவின் மேல் கடற்கரையோரமாயுள்ள மலை நாட்டில் சேர ராஜ்யம் பரவியிருந்தது. அதனுடைய முக்கியப் பட்டணம் வஞ்சி என்பது. அந்த மலைப் பிரதேசத்தைச் சேர வம்சத்து மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களுக்கும் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் அடிக்கடிச் சண்டைகள் ஏற்பட்டு வந்தன.

சேர மன்னர்களில் சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறை என்பவர் மிகப் புகழ் பெற்றவர். அவர் தமிழ்ப்பாஷையில் மிக்க அபிமான முள்ளவராகையால் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தார். ஒரு சமயம் ‘மோசகீரர்’ என்ற ஒரு தமிழ்ப் புலவர் அவரைக் காண வந்தார். அப்பொழுது சேர மன்னர் வெளியிற் சென்றிருந்ததால் அந்தப் புலவர் அரசரின் கட்டிலின்மீது படுத்துத் தூங்கிவிட்டார். அவர் தூங்கிக்கொண்டிருக்கையில், சேர மன்னர் திரும்பிவந்ததும் ஒரு தமிழ்ப் புலவர் தூங்குவதைக் கண்டு, அவர்மீது கோபங் கொள்ளாமல் தாமே ஒரு விசிறியால் விசிறினார். புலவர் தூங்கி

எழுந்ததும், அரசர் தம்மைக் கடுமையாகத் தண்டிப்பார் என நினைத்துப் பயந்து நின்றார். ஆனால் அரசர் அவரிடம் அன்பு காட்டி ஆதரித்தார். இதைக் கண்டு மகிழ்ந்து அத்தமிழ்ப் புலவர் சில பாடல்களைப் பாடினர். அவை 'புற நானூறு' என்னும் தமிழ் நூலில் அடங்கியுள்ளன.

சேர ராஜ்யம் பதின்மூன்றாவது நூற்றாண்டில் க்ஷீணித்துவிட்டது.

11. சோழ ராஜ்யம்

கரிகாலர்:—ஆதிகாலந்தொட்டு இந்த ராஜ்யத்தை அநேக சோழ வம்சத்து மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களில் கரிகாலர் சுமார் 1820 வருஷங்களுக்கு முன் இந்த ராஜ்யத்தை ஆண்டுவந்தார். அவருடைய ஆட்சியில் உறையூர் இதன் தலைநகராக இருந்தது. காவிரிப்பூம் பட்டினம் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் வியாபார ஸ்தலமாகவும் இருந்தது. அவர் காவிரியின் இரு கரைகளையும் உயர்த்தி வெள்ளம் ஏற்படாமல் செய்தார். நாட்டில் வியாபாரம் பெருகியதால் சோழ ராஜ்யத்தில் செல்வம் நிறைந்த கனவான்கள் இருந்தார்கள். பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற பழைய தமிழ் நூல்களில் காவிரிப்பூம்பட்டினம் வெகு அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

நாலாவது நூற்றாண்டில் பல்லவர்கள் சோழர்களைத் தோற்கடித்துத் தங்களது ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டார்கள். சோழ மன்னர்கள் பல்லவர்களின்



தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில்

ஆதீனத்தின் கீழிருந்தார்கள். பிறகு அவர்கள் மறுபடியும் பலமடைந்து, சுயேச்சையுடன் அரசாளத் தொடங்கினார்கள்.

ராஜராஜ சோழர் :—சோழ நாட்டை ராஜராஜ சோழர் கி. பி. 989 முதல் கி. பி. 1002வரையில் ஆண்டுவந்தார். அவர் சோழ மன்னர்களில் மிகக் கியாதி பெற்றவர். அவரது காலத்தில்தான் தஞ்சாவூர் நகரில் உள்ள பிரகதீஸ்வரர் கோவில் கட்டப்பட்டது. அதில் ஒரே கல்லால் செய்யப்பட்ட ஒரு பெரிய நந்தி இருக்கிறது. அவர் பாண்டியர்களையும் பல்லவர்களையும் பல சண்டைகளில் தோற்கடித்து அவர்களுடைய ராஜ்யங்களை ஜயித்துக் கொண்டார். மேலும், அவர் ஸிலோன் தீவையும் லக்ஷத் தீவுகளையும் ஜயித்துத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

ராஜேந்திர சோழரும் குலோத்துங்கரும் —ராஜராஜ சோழருக்குப் பின் அவரது புதல்வரான ராஜேந்திரர் பட்டத்துக்கு வந்தார். அவர் கங்கை வரையில் கிழக்குக்கடற் கரையோரமாயுள்ள நாடுகளை ஜயித்துத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். ஆனதுபற்றி அவருக்குக் 'கங்கைகொண்டசோழர்' என்ற பெயரும் வழங்கிவந்தது. அவரது அரசாட்சிக் காலத்தில்தான் திருச்சி ஜில்லாவிலுள்ள 'கங்கைகொண்டசோழபுரம்' என்ற பட்டணம் ஏற்பட்டது. ராஜேந்திர சோழருக்குப் பிறகு குலோத்துங்கர் சோழ ராஜ்யத்தை ஆண்டுவந்தார். அவர் வேங்கி நாட்டை ஆண்டுவந்த சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவரானதால், வெங்கி நாடும் சோழ ராஜ்யத்தோடு

சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆகையால் குலோத்துங்கரின் ராஜ்யம் வடக்கே கிருஷ்ணு முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் பரவியிருந்தது. அவர் குடிகளின் நன்மையைக் கருதிப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் தமது ராஜ்யத்திலுள்ள நிலங்களை அளக்கும்படிச் செய்து எல்லைக் கற்களை நட்டு வைக்கும்படிச் செய்தார். மேலும், அவர் தம் ராஜ்யத்தில் வியாபாரம் மேன்மேலும் பெருகச் சுங்க வரியைத் தள்ளினர். இக்காரணத்தினல் அவருக்குச் 'சுங்கம் தவிர்த்த சோழர்' என்ற பெயரும் வழங்கி வந்தது. அவருக்குச் சைவமதத்தில் அபிமானம் அதிகமாகையால், அவர் தம் ராஜ்யத்தில் அநேகச் சிவன் கோவில்களைக் கட்டுவித்து அவைகளுக்கு நிலங்களை மானியமாக வைத்தார்.

சோழ ராஜ்யத்தின் அழிவு:—குலோத்துங்கரின் காலத்துக்குப் பின் சோழ ராஜ்யம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது இதற்குப் பல காரணங்கள் உண்டு. பாண்டியர்கள் கலகம் செய்து சுயேச்சை அடைந்தார்கள். சிங்களர்கள் சோழ ராஜ்யத்தின் மீது அடிக்கடி படையெடுத்துத் தொந்தரவு விளைவித்தார்கள். சோழ ராஜ்யத்தில் அடங்கியுள்ள வேறு சில நாடுகளும் சுயேச்சை அடைந்தன. மேலும், குலோத்துங்கருக்குப் பின் வந்த சோழ மன்னர்கள் அவரைப் போல அவ்வளவு பராக்கிரமமுள்ளவர்களாக இல்லை. இக்காரணங்களால் பதின்மூன்ருவது நூற்ருண்டின் முடிவில் சோழ ராஜ்யம் நசித்துப் போயிற்று.

III. பாண்டிய ராஜ்யம்

இந்த ராஜ்யம் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் வழியாய் ஓடும் வெள்ளாறு முதல் தெற்கே கன்னியா குமரி வரையில் பரவியிருந்தது. தாம்பிரபரணி கடலில் சங்கமமாகும் இடத்திற்கு அருகிலுள்ள கொற்கை இந்த ராஜ்யத்தின் முதல் தலைநகரமாக இருந்து வந்தது. அது ஒரு துறைமுகப் பட்டினமாதலால் அந்த ராஜ்யம் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாகவும் இருந்தது. இப்பொழுது கொற்கை மீன் பிடிப்பவர்கள் வசிக்கின்ற ஒரு கிராமமாக இருக்கின்றது. பிற்காலத்தில் மதுரை பாண்டிய நாட்டின் முக்கியப் பட்டணமாக ஆயிற்று. பண்டைக்காலத்தில் பாண்டியர்கள் அயல் நாட்டார் களோடு கடல் மார்க்கமாய் வியாபாரம் செய்து வந்தார்கள். இதற்கு அடையாளமாகச் சில வருஷங்களுக்கு முன்பு மதுரை நகருக்குச் சமீபத்தில் ரோமானியர்கள் வழங்கி வந்த சில நாணயங்கள் பூமியிலிருந்து அகப்பட்டதைக் கூறலாம்.

பாண்டிய மன்னர்களில் நெடுஞ்செழியன் என்பவர் ஒருவர். அவர் ஏழாவது நூற்றாண்டில் மதுரையில் ஆட்சி புரிந்து வந்தார். அவருக்குப் பிறகு சுந்தர பாண்டியர் பாண்டிய ராஜ்யத்தை ஆண்டு வந்தார். அந்த மன்னருக்குக் 'கூன் பாண்டியர்' என்றும், 'நெடுமாறர்' என்றும் வேறு பெயர்கள் உண்டு. அவர் முதலில் சமண மதத்தைத் தழுவிவந்தார். பிறகு திருஞான சம்பந்தர் என்ற ஒரு சிவனடியார் அவரைச் சைவ மதத்தைத் தழுவும்படிச் செய்தார்.

சோழர்களுடனும் பல்லவர்களுடனும் பாண்டியர்கள் அடிக்கடி சண்டை செய்தார்கள். பாண்டிய வீரர்கள் போருக்குச் செல்லும்பொழுது வேப்ப இலை மாலையை அணிந்து கொள்வார்கள். அவர்களது கொடியில் மீன் உருவமுள்ளது.

திராவிடர்களின் நாகரிகம்:—தமிழ்நாட்டினர்கள் அதிக நாகரிகம் வாய்ந்தவர்கள். அவர்கள் வீடு கட்டுவதிலும் சித்திரங்கள் எழுதுவதிலும் சிற்பவேலை செய்வதிலும் மிகத் தேர்ச்சி பெற்றவர்கள். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து, அரியபெரிய நூல்களை இயற்றும்படிச் செய்து வந்தார்கள். ஔவையார், திருவள்ளுவர், சேக்கிழார், புகழேந்திப் புலவர், ஒட்டக்கூத்தர், கம்பர் அவர்களில் முக்கியமானவர்கள். வியாபாரம் மேன் மேலும் விருத்தியடைவதற்கு வேண்டிய சாதனங்களைச் சோழ மன்னர்கள் செய்து வந்தார்கள். அயல் நாடுகளுடன் வியாபாரம் செய்வதற்கும் நாட்டின் பாதுகாப்பிற்கும் உதவும்படிப் பெரிய கப்பற் படைகளைச் சோழ மன்னர்கள் வைத்திருந்தார்கள். அக்காலத்தில் கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் முதலான துறைமுகங்களில் கலங்கரை விளக்குகள் நின்றன. தங்கம் வெள்ளி இவைகளாலாகிய ஆபரணங்களைச் செய்வதற்கும், பயிர்த் தொழிலுக்கு உதவக் கூடிய கருவிகளைச் செய்வதற்கும் கத்தி, கேடயம், ஈட்டி முதலிய போராயுதங்களைச்செய்வதற்கும் தமிழர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

கேள்விகள்

1. பண்டைக் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த மூன்று முக்கியமான ராஜ்யங்கள் யாவை?
2. தென்னிந்தியாப் படம் வரைந்து அவற்றைக் குறிப்பிடுக.
3. கரிகால சோழரைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.
4. ராஜ ராஜ சோழரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?
5. கங்கைகொண்டசோழபுரம் கோவில் கட்டியது யார்?
6. குலோத்துங்கச் சோழர் தன் குடிகளுக்கு என்ன நன்மைகளைச் செய்தார்?
7. சோழ ராஜ்யம் எக்காரணங்களால் அழிந்தது?
8. பாண்டிய ராஜ்யத்தில் ஆண்ட ஒரு பெரிய மன்னரைச் சொல்லு. அவரைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.
9. பாண்டிய நாடு எப்படிச் சிறப்புற்றிருந்தது?

20. இந்து மதாச்சாரியார்கள்

இந்து மதாச்சாரியார்கள் தோன்றியதேன்:—ஆதிக்காலம் முதல் நமது நாட்டில் இந்து மதம் முக்கிய மதமாய் இருந்து வந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன், வட இந்தியாவில் ஜயின மதமும் புத்த மதமும் ஏற்பட்டபின், ஜனங்களுக்கு இந்து மதத்தில் அபிமானமும் நம்பிக்கையும் குறையத் தலைப் பட்டன. வட இந்தியாவில் ஆட்சிபுரிந்து வந்த அசோகர், ஹர்ஷர் முதலான மன்னர்கள் புத்த மதத்தைத் தழுவி வந்ததோடு அம்மதத்தை ஆதரித்துப் பரவவும் செய்தார்கள். தென்னிந்தியாவில் புத்த மதமும் ஜயின மதமும் பரவியதால், இந்து மதம் க்ஷீணித்து வரலாயிற்று. ஆகையால், தென்னிந்தியாவில் இந்து மதத்தின் மேன்மையை ஜனங்களுக்குப் போதிக்க மூன்று மதாச்சாரியார்கள் தோன்றினார்கள். ஸ்ரீமத் சங்கராச்சாரியார், ஸ்ரீமத் ராமானுஜாச்சாரியார், ஸ்ரீமத் மத்வாச்சாரியார் என்ற இம்மூவரும் பெரிய மதாச்சாரி யார்கள் ஆவர். இவர்கள் ஒரே காலத்தவர் அல்லர்; வேறு வேறு காலத்தில் இருந்து வந்தார்கள். ஒவ்வொரு வரும் தத்தம் மதக் கொள்கைகளை ஜனங்களுக்குப் போதித்து வந்தார்கள்.

1. சங்கராச்சாரியார்:—அவர் மலையாளம் ஜில்லா விலுள்ள காலடி என்ற ஊரில் கி. பி. 788-ல் பிறந்தார்.

அவருடைய தகப்பனர் நம்பூத்ரி குலப் பிராமணர். அவர் இளம்பிராயத்திலேயே தமது தந்தையை இழந்தார். அவர் பதினாருவது வயதில் சகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டுவிட்டார்: பிறகு அவர் ஒரு குருவை அடைந்து சந்நியாசம் பெற்றார். இதற்குப் பிறகு அவர் காசி நகருக்குச் சென்று சில ஆண்டுகள்



ஸ்ரீமத் சங்கராச்சாரியார்

அங்கே தங்கியிருந்தார்; பிற்கு அவர் தெற்கு நோக்கி வரும்போது, இந்து மதத்தின் மேன்மையைப் பற்றி ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டே வந்தார். அவர் முப்பத்திரண்டாவது வயதில் தேக வியோகமானர்.

ii. ராமானுஜாச்சாரியார் — ராமானுஜாச்சாரியார் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஸ்ரீபெரும்பூதூர் என்னும் கிராமத்தில்பிறந்தார். அவர்காஞ்சீபுரத்துக்குச்சென்று அங்கேயிருந்த ஒரு குருவை நாடி அவரிடமிருந்து சகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டார். பிறகு அவர் தமது குருவைக் காட்டிலும் சாஸ்திரங்களில் தேர்ச்சி

ஸ்ரீமத் ராமானுஜாச்சாரியார்

பெற்றார். அதனால் மற்ற சிஷ்யர்கள் அவரிடம் பொறாமை கொண்டு அவரைக் கொன்றுவிட எத்தனித்தார்கள். இதையறிந்த ராமானுஜர் ஸ்ரீரங்கத்துக்கு ஓடிவிட்டார். அங்கே அவர் சில காலம் வசித்து வந்தார். அநேகர் அவரிடமிருந்து சாஸ்திரங்களைக் கற்று

வந்தனர். பிறகு அவர் காஞ்சீபுரத்துக்குத் திரும்பி வந்து சந்நியாசம் பெற்றார்.

iii. ஸ்ரீமத் மத்வாச்சாரியார்:—அவர் தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள உடுப்பி என்ற ஊரில் பிராமண குலத்தில் பிறந்தார். அவர் இளம்பிராயத்திலேயே சகல சாஸ்திரங்களையும் கற்றுக் கொண்டார். அவர் இருபத்தைந்தாவது வயதிலேயே சந்நியாசம் பெற்றார். அவர் இந்து மதத்தின் கொள்கைகளை ஜனங்களுக்குப் போதித்து வந்தார். மத்துவர்கள் மகாவிஷ்ணுவையும், ஆஞ்சநேயரையும் பூஜை செய்து வருகிறார்கள்.



ஸ்ரீமத் மத்வாச்சாரியார்

மேற்கூறிய மூன்று மதாச்சாரியார்களும் அவர்களுடைய சந்ததியார்களும் இந்து மதத்தின் கொள்கைகளை ஜனங்களுக்குப் போதிப்பதற்காகத் தென்

இந்தியாவில் அனேக மடங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளில் சிலவற்றைக் காலடி, காஞ்சீபுரம், கும்பகோணம், அஹோபிலம், உடுப்பி முதலன இடங்களில் இன்றைக்கும் காணலாம். இம் மூவரும் ஸ்ரீவியாஸ சூத்திரங்களுக்கு வேறு வேறு பொருள்பட உரை எழுதியிருக்கின்றனர்; தத்தம் கொள்கைகளை நிலை நாட்டி வேறு பல நூல்களையும் இயற்றியிருக்கின்றனர்.

கேள்விகள்

1. இந்து மதக் கொள்கைகளை ஜனங்களுக்குப் போதித்து வந்த மூன்று மதாச்சாரியார்கள் யாவர்?
2. ஸ்ரீமத் சங்கராச்சாரியார் எந்த ஊரில் பிறந்தார்? அவரைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.
3. ஸ்ரீமத் ராமானுஜாச்சாரியார் எந்த ஊரில் பிறந்தார்? அவர் எங்கெந்த ஊர்களில் தங்கி மதபோதனை செய்தார்?
4. ஸ்ரீமத் மத்வாச்சாரியார் எந்த ஊரில் பிறந்தார்?
5. அவர்களுடைய மத போதனையால் உண்டான நன்மை யாது?

கால அட்டவணை 2

வருஷங்கள்	முக்கிய நிகழ்ச்சிகள்
கி. பி. 550	சாளுக்கிய வம்சத்தார் ராஜ்யத்தை ஸ்தாபித்தல்
,, 609— 642	இரண்டாவது புலிகேசி
,, 620	நருமதை நதிச் சண்டை
,, 625— 645	நரசிம்ம வர்மன்
,, 754	சாளுக்கிய ராஜ்யத்தின் அழிவு
,, 788	ஸ்ரீமத் சங்கராச்சாரியார் பிறப்பு
,, 754— 973	ராஷ்டிரகூடர்கள்
,, 973	இரண்டாவது சாளுக்கிய வம்சம்
,, 989—1002	ராஜராஜ சோழர்
கி. பி. 13-வது நூற்றுண்டு	சோழ ராஜ்யம் அழிவு

Printed at The Swamy Power Printing Works, Kumbakonam.

The Swamy Power Printing Works,
Kumbakonam.